# திருக்குரல்

தொகுப்பு :

## நாகை-தருமன்

அன்பு நிலையம்

131 பிராட்வே சென்னை-1

முதற் பதிப்பு ஏப்ரல் 1967

தயாரிப்பு

K. R. நாராயணன்

விலை ரூ. 1—50

அச்சிட்டோர் : பாரி அச்சகம், 127, பிராட்வே, சென்னை-1.

# தமிழுருவம்

தமிழ்ச்சொல்லுக்குத் தனி ஓசையுண்டு—இசையுண்டு ! அதில் தனிச் சுவையுமுண்டு. எண்ணமெல்லாம் ஈர்க்கும் திறனுண்டு. இன்னும் எத்தனையோ சிறப்புகளுண்டு ! ஆனால் தமிழ் இதுதான் என்று காட்டிட உருவமுண்டா?

பல்வேறு நாட்டினரின் மொழிகள் பலவற்றிற்கும் இல்லாத சிறப்புகள் நமது அன்னைத் தமிழுக்குப் பலவுண்டு. அவைகள் எல்லாவற்றிற்கும் மேலான தனிச்சிறப்பு ஒன்று உண்டு.

மற்றையமொழிகள் எதற்கும் உருவமில்லை ! தமிழ் இது தானென்று பெருமையோடு அருமையாகக் காட்டிட நம்மிடையே உருவமுண்டு !

" என்ன.. ...உருவமுண்டா... ..? தமிழுக்கா.........ஒரு மொழிக்கு உருவம் இருக்க முடியுமா ? உண்மையாகவா?" வியப்பால் விழிகள் விரிகின்றனவே !

" ஆமாம் .. . உண்மையிலேயே நமது தமிழுக்கு உருவமுண்டு."

'எங்கே அந்த உருவம் ?' நெடுநாட்களாகத் தாயைக் காணாமல் பிரிந்திருந்த குழந்தை தன் தாய்தானா என்று பலரையும் உற்று நோக்குவது போன்ற உணர்வு.

அந்த உருவத்தைக் காணவேண்டுமா ?

இதோ—குட்டையான தோற்றத்தோடு, குறும்பு கலந்த கனிவான பார்வையோடு அறிவொளி வீசும் கண்களோடு அனுபவத்தைக் குறிக்கும் அமைதியான முகத்தோடு இருப்பவர்தான்—அந்த உருவம்தான் தமிழ் !

இன்னும் கவனிக்க வேண்டும்போல் ஒருவித ஆர்வம் ! நெருங்கிச் சென்று மீண்டும் கவனிக்கின்றோம்.

பரந்து விரிந்த எண்ணங்களைக் காட்டும் நெற்றி. தன்னைப் பழிப்போரையும் பரிதாபத்தோடு பார்க்கும் கருணை பொங்கும் விழிகள், சோர்வுற்ற மக்கள் புத்துணர்ச்சி பெற சோர்விலாது செந்தமிழ் முழங்கும் வாய் ! பகைவரிடமும் பரிவு காட்டும் பண்புள்ள அன்புள்ளம். புதிய முறையில் புரட்சிமிக்க எழுத்தோவியங்களைத் தந்த கரங்கள், தமிழர் நலம் காக்க நாளும் தளராது பணிபுரியும் கால்கள்.

காணக்காண சலிப்பேற்படாதபடி அந்த எளிமையான உருவத்திடம் அப்படி என்னதான் இருக்கிறதோ? இன்னும் அருகே நெருங்கிக் காண ஆசை எழுகிறது.

இடைவெளி குறைகின்றது. இருவிழிகளும் வியப்பால், மதிப்பால் விரிகின்றன.

"பேரறிஞர் அண்ணு" வாய் அனுமதியில்லாமலே ஆர்வத்தோடு முணுமுணுக்கிறது.

ஆம்! நாட்டிலுள்ளோரின் நல்லிதயங்களில் என்றும் நீங்காது நிறைந்திருக்கும் பேரறிஞர் அண்ணுதான்தமிழுருவம்!

எப்படி?

தமிழ் தந்த பழந்தமிழ்ப் பெரியோர் தமிழை இயல், இசை, நாடகம் என்று முத்தமிழாய்ப் பிரித்து மொழியில் தனித்தன்மை உண்டாக்கினர். உலகில் வேறு எந்த மொழியிலும் இது போன்ற பிரிவுகள் இல்லே! தமிழுக்கு மட்டுமேயுள்ள தனிச் சிறப்பு இது!

இந்த முத்தமிழும் குடியிருக்கும்-கொலுவிருக்கும் இடம் அறிஞர் அண்ணுவின் உள்ளம்.

மேடையிலே பேசும்போது நமதண்ணு ஓடையிலே ஓடி வரும் ஆடிப் புதுப் புனல்போல் சொல்லுதிர்க்கும் ஆற்றல்தான் -இயல் தமிழ்!

வீணையின் நாதமோ . யாழின் இனிமையோ என்று வியந்திடும் வகையில் சொல்லும் சொற்களுக் கேற்ப குழைவோடு, ஏற்றத்தோடு கூறிடும் அழகுதான் இசைத்தமிழ்!

நாடகத் தமிழுக்கு அண்ணு செய்த அரும் சேவையை நாடே அறியும். நலிவுற்ற நாடகத்துறையில் மறுமலர்ச்சி உண்டாக்கி நல்ல தமிழில் நாடகங்கள் பல தீட்டி, நாடே வியந்து பாராட்டும் வகையில் நாடகத்தில் திறம்பட நடித்து, பலதரப்பட்டவர்களின் பாராட்டுதலுக்கும் உரியவரானவர் அண்ணு!

இப்படி முத்தமிழிலும் தன் தனி முத்திரையைப் பதித்ததால் பேரறிஞர் அண்ணுவைத் தமிழுருவம் என்கிருேம்

இதுதாஞ?

தமிழைத் தாய்மொழி என்கிருேம். அன்னேத் தமிழே என்று வணங்குகின்ருேம்.

அதைப்போல் தமிழையும், தமிழர்களையும் காக்கும் தன்மானத் தலைவரை அண்ணா என்கிறோம்.

உறவு உதட்டிலிருந்து மட்டும் பிறந்தால் அது காற்றோடு கலந்து மறைந்துவிடும். உள்ளத்திலிருந்து மலர்வதால் உயிரோடு ஒன்று கலந்து நிலைத்திருக்கும். உயிரோடு ஒன்றியது தான் தமிழ்! அந்தத் தமிழோடு ஒன்றி நம்முள் நிறைந்தவர் தான் அண்ணா!

"தமிழ்"—தமிழர் தமக்கு உயிர் மூச்சு! வரலாற்றில் முதலிடம் வகிக்கும் ஆண்ட பரம்பரையின் அன்னை மொழி! முதல் இனத்தின் மூத்த மொழி!

"அண்ணா"—பல கோடி மக்களின் ஒரே இதயம். பண்பும் அன்பும், தெளிந்த நல்லறிவும் கொலுவிருக்கும் தமிழுருவம். உணர்ச்சியின் வடிவாய் எழுச்சியின் வடிவாய் உரிமைகள் பெற்றுக், கடமையைச் செய்யக் காத்திருக்கும் தொண்டின் மைந்தர்.

உயிரோடு, உணர்வோடு கலந்த ஒப்புவமை கூறமுடியாத இனிய தமிழை அன்னை மொழி என்கிறோம்.

அன்னை மொழி காக்க அயராது உழைக்கும் தமிழன்னையின் தலைமகனை "அண்ணா" என்கிறோம்.

அண்ணா தமிழ்த்தாயின் தலைமகன் மட்டுமல்ல—தமிழ்த் தொண்டர், தமிழின் தோழர், தமிழ் மன்னர், தமிழின் தாய்!

தமிழ்ச் சமுதாயத்தை ஒன்று கூட்டி ஒற்றுமை காண்பதிலே அவர் தலைமகன். தமிழில் உள்ள குறைகளையும் தயங்காது இடித்துரைத்து, எடுத்துக்காட்டி அவைகளைக்களைவதிலே அவர் உற்ற நண்பர். தமிழின் உயர்வை-தன் சொல்லாற்றலால், எழுத்துவன்மையால் மேலும் உயர்த்தி தனித்தன்மையோடு சுவை கூட்டுவதில் அவர் மன்னர். தமிழ் வளர்ச்சிக்குத் தன்னலம் பாராது உழைப்பதிலே அவர் தொண்டர். தமிழைக் கண்போல் எண்ணி, இமைபோல் காப்பதிலும், தமிழின் ஏற்றம் கண்டு மகிழ்வதிலும் அவர் தமிழின் தாய்!

இது மட்டுமா?

இதோ அண்ணாவின் சாதனைகள் நமது அகக்கண்ணில் தெரிகின்றனவே!

அண்ணா — கேட்டார்ப் பிணிக்குந்தகையவராய்க் கேளாரும் வேட்ப மொழியும் சொலல் வல்லார். சோர்விலார்!

தமிழை இனிமையானது என்போம். அந்தத் தமிழ் அண்ணாவின் மூலமாக சொற்களாகி வெளிவரும்போதுதான் என்ன கம்பீரம்! அதன் அழகை, சுவையை எந்தத் தமிழ்வார்த்தைகளால் பாராட்டுவது?

அண்ணா—இதயத்தை ஈர்க்கும் இலக்கியங்களை உருவாக்கிய மாபெரும் எழுத்தாளர். எழுத்துலகில் ஒரு புதிய சகாப்தத்தையே உருவாக்கி, உணர்ச்சியும் எழுச்சியும் மிக்க எழுத்தாளர் வரிசை உதயமாகக் காரணமாக அமைந்த எழுத்து வேந்தர். நயமிக்க கவிதைகள் வழங்கும் புத்துலகக் கவிஞர். அரசியல் வானில் ஆதிக்க இருள் மாய்த்து ஜனநாயக ஒளி பரப்பும் உதயசூரியன்

வள்ளுவர் வாழ்ந்தபோது நாம் வாழவில்லை தமிழில் வல்லவர்கள், பெரும் தலைவர்கள் பலரை நாம் கண்டதேயில்லை.

ஆனால் ஒப்பற்ற மேதை, பேரறிஞர் அண்ணா வாழும் இந்த நூற்றாண்டிலேயே வாழ்கிறோம். அவர் பிறந்த தமிழ் நாட்டிலேயே நாமும் பிறந்திருக்கின்றோம். அவரைப் பார்த்துப் பழகி மகிழ்கிறோம் இதைவிட வேறு பெருமை நமக்கென்ன வேண்டும்? ஒவ்வொரு தமிழனும் இதையெண்ணிப் பெருமிதம் கொள்ள வேண்டும்

அருமை நண்பர் உயர்திரு. நாராயணன் அவர்கள் புதுமையான நூல்களை வரவேற்று, பொலிவுடன் வெளியிடுவதில் முதன்மையானவர். அவர் அளித்த ஊக்கமும், உற்சாகமும் ஓராண்டுகாலமாக இந்த முயற்சியில் என்னை ஈடுபட வைத்து, அண்ணாவின் நூல்கள் நூற்றுக்கணக்கில் இதற்காகப் படிக்கும் அரிய சூழ்நிலையும், புதிய முறையில் ஒரு தொகுப்பு நூலை உருவாக்கும் வாய்ப்பும் எனக்களித்த அருமை நண்பரை என்றும் நான் மறவேன்.

அடுத்து-அண்ணாவின் நூல்களையெல்லாம் எனக்குத் தந்துதவிய அருமைச் சகோதரர்கள் ஆ. இராமசாமி, கே. வி. இராமன் ஆகிய இருவருக்கும் நன்றி கூறவேண்டியது எனது கடமையாகும்

அண்ணாவின் உருவில்வாழும் அன்னைத் தமிழே வாழ்க,
தமிழுருவாய்த் தமிழர் நலம் நாடும் அண்ணலே வாழ்க!

வாழ்க!

—நாகை தருமன்.

# என்னெறி – நன்னெறி

தாங்கிக்கொள்வது தளராது இருப்பது—காலம் தவிர்ப்பது கண்ணியம் காப்பது—இவை நமக்கு உரியனவாக என்றென்றும் இருக்கட்டும் இம்முறைதான் நன்னெறி—என்னெறி !

—பேரறிஞர் அண்ணா.

# அண்ணாவின் திருக்குரல்!


அரசியல்


1. விடுதலை
2. ஏழ்மை
3. மாணவர்கள்
4. மக்கள்
5. அடக்குமுறையும் பலாத்காரமும்
6. இலட்சியமும் இலட்சிய வீரர்களும்
7. கட்சி
8. ஏடுகள்
9. மேடைப்பேச்சு
10. தூற்றல், மதிப்பு
11. எழுச்சி
12. ஒற்றுமை
13. சட்டமும், திட்டமும்
14. தொழிலாளி
15. முதலாளித்வம்
16. பொதுக்கடமை
17. சனநாயகம்
18. சோஷலிசமும், சமதர்மமும்

அக இயல்

19. பழமையும், பகுத்தறிவும்
20. சாதிபேதமெனும் சனியன்
21. அழகு, காதல்
22. திருமணம், தாய்க்குலம்
23. வாழ்க்கை
24. அச்சம்
25. கோபம்
26. கலை
27. அறிவும் ஆற்றலும், நிலையும், நினைப்பும், உண்மை
28. அன்பே கடவுள், தூய உள்ளமே கோயில்

பொது இயல்

29. வர்ணனைகள்
30. உவமைகள்
31. தேர்தல் உவமைகள்
32. முத்துக்குவியல்



# அரசியல்

# விடுதலை

ஒரு நாடு தலைமை பெற வேண்டுமானல் அது சிற்றுரிமை பெற்ருல் மட்டும் போதது, முற்றுரிமை பெற்ருக வேண்டும். நாடென்ற தலைப்புக்கே முழு அதிகாரம் அந்த நாட்டு மக்களுக்கு இருக்க வேண்டும் என்பது தான் அரசியல் இலக்கணம்.

அடிமைத்தனம் ஒரு கூட்டுச்சரக்கு.

ஒரு விடுதலை இயக்கம் வானிலே படர்ந்திருக்கும் கரு மேகத்தைப் போன்றது. எந்த நேரத்தில் மின்னும் எப்போது இடி இடிக்கும் எப்பொது மழை பெய்யும் அந்தமழை எப்படி இருக்கும் என்பதைப் பருவ நிலையறிந்தவர்கள் கூட சொல்ல முடிவதில்லை. அது போலத்தான் ஒரு விடுதலை இயக்கத்தின் வலிவை முன் கூட்டிக் கவனித்துச் சொல்லும் ஆற்றல் யாருக்கும் இல்லை.

புரட்சி என்பது வாலிபத்தின் கூறு. பகுத்தறிவாளர் ஆயுதம். பழமை விரும்பிகள், புரட்டர்கள், ஏதேச்சாதிகாரிகள் ஆகியோருக்கு நஞ்சு. மக்களின் மகத்தான சக்தி! அதைப் பொசுக்கிட எவராலும் முடியாது.

உபகாரத்தைத் தருபவருக்கும், பெறுபவருக்குமிடையே எஜமான், அடிமை நிலைதான் இருக்கும். ஆனால், உரிமையைத் தருவது, பெறுவது என்கிற இடத்திலேயோ சம நிலை, சம அந்தஸ்து இருக்கும். ஆகவே உபகாரம் பெறுவது எளிது உரிமையைப் பெறுவது கடினம்.

உபகாரம்—'ஐயோ பாவம்' என்ற உணர்ச்சியின் விளைவு. உரிமை—'ஏன் ? எப்படி ?' என்ற முழக்கத்தின் முடிவு.

உபகாரம் செய்வதற்குக் காட்ட வேண்டிய தியாக உணர்ச்சி குறைவு, தீரமும்குறைவுதான். ஆனால் உரிமையைத் தருவதற்கோ தியாக உணர்ச்சியும், தீரமும் அதிகமாகத் தேவை. ஆகவேதான் உபகாரம் செய்யச் சம்மதிப்பவர்கள் கூட உரிமையைத்தரச் சங்கடப்படுகின்றார்கள்.

விடுதலை பெறுவதற்கு இன்றியமையாதது அதற்கான உணர்ச்சிக்கு ஊறு நேரிடாதபடி பார்த்துக் கொள்வதும், உணர்ச்சி பெற்றவர்களின் நிலையை உண்டாக்குவதுமாகும்.

தாய் நாட்டின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு பணி புரிபவனே வீரன். விவேகி! அவனுடைய அறிவும், ஆற்றலும் அந்த அரும்பணிக்கே அர்ப்பணிக்கப்பட வேண்டும்.

கருகிட இருந்த அரும்பு மலர்ந்தது போல - மங்கிவிட்ட கண்கள் மீண்டும் ஒளி பெறத் தொடங்கியது போல - தேய்ந்த நிலவு திடீரென முழுமதியானது போல ஒரு நாட்டின் வரலாற்றிலே ஏற்படுகின்ற உன்னதமான சம்பவம்-சுதந்திரம்.

# ஏழ்மை

ஏழையின் வாழ்வில் நிம்மதியை ஏற்படுத்தா விட்டால் உன்னையும், உன் உலகத்தையும் அழித்துவிடுவான். அம்பாரியின் மீது ஏறிக் கொண்டால் யானையைக் கொடுமைப் படுத்தலாம் என்று எண்ணுதே ! யானைக்குக் கோபம் பிறந்தால் அதன் காலின் கீழ் நீ கூழாகிவிடுவாய்.

❋

ஏழ்மையின் வேதனையை உணர்ந்து தன் போல் கஷ்டப் படுவர்களைக் காண நேரிடும் போது கண்ணீர் வடிக்கும் இளகிய மனது படைத்த ஏழையும் உண்டு. ஏழ்மை கொட்டிக் கொட்டி மனமே மரத்துப்போய் ஈவு இரக்கங் காட்டமுடியாத ஏழையும் உண்டு.

❋

ஏழ்மை கண்டு உலகம் இகழ்கிறது வெறுக்கிறது என்பது தெரிந்து தன் ஏழ்மையை மறைக்கப் பார்க்கும் ஏழையின் நிலைமை மிகமிக வேதனை நிரம்பியது.

❋

ஏழை என்ற சொல்லிலே அடங்கியிருக்கும் ஆபத்தை உணராமலேயே சமூகத்தின் காவலர்கள் என்ற நிலை பெற்றவர்கள் தத்தம் காரியத்தையே கவனித்துகொண்டு போகின்றனர்.

❋

ஏழை அழுகிறன். ஏழையின் தொகை வளருகிறது. ஏழையின் ரகங்கள் வளருகின்றன—கவனிப்பார் இல்லை சமுதாயத்தில் ஏழைகளின் தொகை பெருகுவது படகுக்கு அடியிலே ஏற்படும் வெடிப்புகள் என்பதை உணருவதில்லை. ஓரிடத்திற்கு அலங்காரப் பூச்சு தேடுகிறார்கள். அவர்கள் அறியவில்லை ஓடத்திற்கு அடியிலே ஏற்படும் ஓட்டைகளை.

❋

இந்த உலகிலே நாம் காணுகின்ற பேருண்மைகளில் ஒன்று—இங்கே ஏழையும் வாழமுடியாது; பணக்காரனும் வாழ முடியாது.

ஏழையின் காலில் ஒட்டிக் கொண்டிருக்கும் சேறு சந்தன மாக மாறவேண்டுமென்பது இலட்சியம்.

சட்டையில்லாத சங்கரன் வேட்டியில்லாத வேலன் புடவையில்லாத பொம்மி, சோப் கிடைக்காத சொக்கி செருப்பு வாங்க முடியாத சிங்காரம் நாட்டிலே அதிகமாக இருக்கிறார்கள்.

வளமையினருக்கே வறுமை; பலத்தினருகே பயம். இவை ஏன் ?

# மாணவர்கள்

அறிவியலின் ஒரு பகுதி அரசியல். அரசியலை நீக்கி விட்டு அறிவைப் பெற முடியுமா ? அரசியலில் மாணவர்கள் ஈடுபடக் கூடாது என்றாலும், அரசியலைப்பற்றி மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இதைச் செய்தால் தான் அரசியல் நாகரிகம் வளரும்.

சொற்சுவையும், பொருட் சுவையும் இழைத்து கேட் போருக்கே களிப்பூட்டுவதோடு கருத்தையும் குழைத்தூட்டும் இசைபோன்ற பருவம், சுயநலமும் சுகபோகப் பித்தும் எருமை எனப்புகுந்து இதய கமலத்தைத் துவைத்துப் பாழ் செய்யாப் பருவம் மாணவப்பருவம்.

வெட்டிப் பேச்சைத் தட்டி நடக்கும் தீரர்கள் - மட்டித் தனத்தை மட்டந்தட்டும் மாவீரர்கள் - சுலோகங்களால் சுக வாழ்வு நடத்தும் சுய நலமிகளைச் ''சுருட்டிக் கொள் உன் சூதை' என்றுரைக்கும் சூரர்கள் மாணவர்கள்

பகுத்தறிவு என்னும் பகலவனுல் எரிக்கப்பட்டு, சுயநலம்– சுய சுகம் ஆகிய விஷப்பூச்சிகள் அழிக்கப்பட்ட தூய்மையான தோர் வட்டாரம் வாலிபர் உள்ளம்.

சந்தனக் காட்டைக் கடந்து மணமும், குளிர்ச்சியும் மருவி மக்களை மகிழ்விக்க வருகிறதே தென்றல் அது போன்றது வாலிபம்.

வாலிபர்கள், உரிமைப் போர்ப் படையின் ஈட்டிமுனைகள்- நடமாடும் எஃகுக் கம்பிகள். வாலிபர்கள் அகத்திலே அருவி போல ஆர்வமுண்டு

மனிதன் மனிதனுக வாழ வழிகண்டு பிடிக்கும் வேலை வாலிபர்கள் முன் இருப்பது.

வாலிபர்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதை, உணர்ச்சி யும் தேவை. புது வாழ்வு பெற. முழு வாழ்வு பெற.

முடியுமா ? காலம் சரியா ? போதுமான பலமிருக்கிறதா இந்தப் பேச்சுகள் வாலிபர்கட்கு இனிப்பாய் - இரா. சும்மா இருக்கலாமா ? சொரணை யற்றவர்களா நாம் - புறப்படு போரிடு - இந்தப் பேச்சுதான் வாலிபர் செவி புகும்

# மக்கள்

மக்கள் மந்திரிகளுக்குப் பயப்பட வேண்டியதில்லை ஆட்சியில் மாறு ஏற்பட்டால் மந்திரிமார்களை மாற்றும் பொறுப்பு மக்களுடையது.

☀

சகல சக்தியும் கிளம்பும் ஊற்று ஜனசக்தி!

மக்களின் மனவலிமை மகத்தானது. அது மன்னர்களின் படை வலிவை முறியடிக்கக்கூடியது.

☀

மலர் விரிந்தால் மணம் வீசத்தான் செய்யும். மேகங்கள் கூடினால் மயில் ஆடத்தான் செய்யும். தென்றல் வீசினால் குளிர்ச்சி ஏற்பட்டுத்தான் தீரும். அதைப் போல ஆட்சி அலங்கோல மானால் மக்கள் கண்டிக்கத்தான் செய்வர்.

☀

மலை கண்டு, நதி கண்டு, மா நிதி கண்டு அல்ல ஒரு நாட்டை உலகம் மதிப்பது அந்த நாட்டு மக்களின் மன வளத்தைக் கண்டே மாநிலம் மதிக்கும்.

☀

மக்களுடைய உணர்ச்சி சட்ட முறையில் வெளிவாரதபடி தடுக்கப்பட்டால் அது பொங்கி எழுந்து சமுதாயத்தின் பல துறைகளிலும் வெள்ளமெனப் பாய்ந்து செல்லும்.

☀

மக்கள் ஜனநாயகக்காலத்தில் சர்க்காரைக் கவனிக்கவும் கண்டிக்கவும் அவர்களுக்கு உள்ள உரிமையை மறந்துவிடக் கூடாது.

☀

மக்களை நல்லவர்களாக்க வேண்டுமானால் அவர்கள் மனதிலே உள்ள மாசு, மதவெறி ஜாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் ஒழிந்தாக வேண்டும்.

✱

மாலைக்கு மலர் தேவை. மலருக்கோ தோட்டவளம் தேவை. அது போல் அரசுக்கு அழகு தர மனிதன் ஒழுங்காக வாழ வேண்டும். மனிதன் ஒழுங்காக வாழ சமதர்ம வாழ்வு தேவை.

# அடக்குமுறையும் பலாத்காரமும்

ஒரு இனம் தங்கள் குறைபாடுகளையும், தாங்கள் படும் வேதனைகளையும் கூறி, அவை ஏற்பட்ட விதத்தையும் விளக்கி அக் குறைபாடுகள் ஒழிய வேண்டும் நீக்கப்பட வேண்டும் என்ற உணர்வு பெற்று, அதன் பொருட்டு உழைத்துவரும் முறையைத் தவறென்று, சட்டவிரோதமென்று கருதி அடக்கு முறைகளை அள்ளி வீசுவது ஜனநாயக ஆட்சிமுறைக்கு முற்றிலும் புறம்பானது.

✱

அரசியல்வாதிகளைச் சிறைக்கு அனுப்புவது ஆபத்தை விலைக்கு வாங்க அச்சாரம் கொடுப்பதைப் போன்றதாகும்.

✱

அதிகாரம் ஒரு போதை! பருகப் பருக இனிக்கும். பழகப் பழக அதிலே சொக்கி விழாதவர்கள் வெகு சிலரே!

✱

சிறைக்குள் தள்ளி. கிளர்ச்சியை அடக்கிய எந்தவல்லரசும் வரலாற்றில் இடம் பெற்றதில்லை. பாஸிசத்தின் முதல் அடி-

பயங்கரமானதாக இருக்கும். ஆனால், அதன் வீழ்ச்சி எதிர் பாராத நேரத்தில் இருக்கும், திடீரென்று சரியும்.

☀

இது சரியா, இது முறையா என்ற கேள்விகளைக்கூட எதிர்த்தா பேசுகிறாய்? என்னிடமா கேள்வி என்ற அதிகார மொழிபேசி அடக்கப் பார்ப்பது அறிவுடைமையுமல்ல. ஆண்மைத்தனமும் ஆகாது. அது கேவலம் முட்டாள்தனம்.

☀

அடக்குமுறை-பலாத்காரம் இதில் எதனால் எது உண்டாகிறது என்பது விவாதத்துக்குரிய ஒரு கேள்வி. உலகில் அதற்குச் சரியான விடை இன்னும் காணப்படவில்லை.

☀

அடக்குமுறை நியாயமான போராட்டத்தை நடத்துவதற்கு இடையூறாகச் சலிப்பையோ, சஞ்சலத்தையோ சோர்வையோ தந்துவிடாது. சோர்ந்து கிடக்கும் சிலரையும் எழுப்பிவிடும்.

☀

அடக்குமுறைக் கொடுமையால் பலாத்காரம் துவங்கியது என்று மக்கள் கூறுகிறார்கள். பலாத்காரம் துவங்கியதால் ஆரம்பித்தது என்று அரசாங்கம் கூறுகிறது.

☀

பலாத்காரம் என்றால் என்ன?-கட்டுப்படுத்தப்படாத உணர்ச்சி! போலீசு முறைகளை மட்டும் பயன்படுத்தி பலாத்காரத்தை அடக்கிவிட நினைப்பது முடியாத ஒன்று.

☀

உடலை ஒடுக்கலாம். உணர்ச்சியை மாய்க்க முடியாது.

☀

யார் மக்களின் ஓட்டுகளைப் பெறத் தக்கவர்கள் என்பது அவர்களின் அறிவாற்றல், செய்தவை இவைகளைக் காட்டிப் பெறுவதாக இருக்கவேண்டும். பதவியைக் காட்டிப் பறிக்கப் படுவதாக இருத்தல் கூடாது. அது தீது-பேராபத்துமாகும்.

❋

உருட்டும் கண், மிரட்டும் சொல் ஒரு காலத்தில் ஆதிக்கக் கருவிகள்.

# இலட்சியமும் இலட்சிய வீரர்களும்

இலட்சியம் வெற்றிபெற வேண்டுமானால் அந்த இலட்சியத்தின் நியாயத்தை விளக்கி விட்டால் போதாது. அந்த இலட்சியத்திற்குப் பலத்தையும் சேர்த்தாக வேண்டும். ஏனெனில் எவ்வளவு நியாயமான இலட்சியமும் பலத்துடன் கூடி இருந்தாலொழிய வெற்றிபெற முடியாது.

❋

அஞ்சா நெஞ்சம் படைத்த இலட்சிய வாதிகள்தான் ஒரு நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய ஒப்பற்ற செல்வங்கள். ஏனெனில் பணம் வெறும் இரும்புப் பெட்டியில்தான் தங்கும். ஆனால் இந்தச் செல்வங்களோ மக்களின் இதயப் பெட்டிகள் தோறும் நடமாடுவார்கள்

❋

இலட்சிய வெறிக்கும், ஆதிக்க வெறிக்குமிடையே போராட்டம் நடைபெற்றால் ..........ஆதிக்கப் பித்து வெற்றி பெற்றது என்பதற்கு உலக சரித்திரத்திலே ஆதாரமே கிடையாது. இலட்சியம் வாகை சூடிற்று என்ற உண்மை ஏராளமாகக் காணக்கிடக்கின்றது.

❋

என் பின்னால் இருப்பவர்கள் இலட்சாதிபதிகளல்ல. இலட்சியத்தை உயிரெனக் கொண்ட தியாகச் செம்மல்கள். அவர்களை இலட்சமோ, கோடியோ ஒன்றும் செய்துவிடாது.

இன்று தனிப்பட்டவர்களின் புகழாலோ தனிப்பட்டவரின் செல்வாக்காலோ கழகம் வளர்ந்து விடவில்லை. கழகம் கொண்டுள்ள இலட்சியத்தால்தான் வளர்கிறது

அறிவு, விவேகம் உள்ளவர்கள் என்பதால் எவருக்கும் பெருமையோ, செல்வாக்கோ கிடையாது. இலட்சியத்தில் நம்பிக்கையும் கொள்கைப் பற்றும் உள்ளவர்களைத்தான் உயர்வாகவும், பெருமையாகவும் மக்கள் மதிப்பார்கள். செல்வாக்கும் புகழும் அவர்களுக்குக் கிடைக்கும். இவைகளில் மாறுபவர்கள் எவராக இருந்தாலும் தூக்கி எறியப்படுவர்.

இரும்பைப் பழுக்கக் காய்ச்சி சம்மட்டியால் அடித்தால் தான் படைக்கலன் கிடைக்கும். அதுபோல சிறைச்சாலை என்ற உருக்காலையில் கொடுமை என்ற வெந்தணலால்பழுக்கக் காய்ச்சி அனுபவச் சம்மட்டியால் அடிக்கப்பட்ட படைக்கலன் தான் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

நடைமுறைக்கு ஏற்றபடி செயல்படுவதும் ஒரு லட்சியத்தின் மீதுதான் கட்டப்பட வேண்டும்.

ஆட்சியாளர் அவிழ்த்துவிடும் அடக்குமுறையைத் தாங்கச் சித்தமாக இருங்கள். அடித்தால் பட்டுக்கொள்ளுங்கள்.

இரத்தம் ஒழுகும்படி அடித்தால் இலட்சியத்திற்குத் தரும் விலை இது என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

அன்னக்காவடிகள் தரும் ஆதரவு பணக்காரர்கள் தரும் 'செக்'கைவிட, ஜமீன்தார்கள் தரும் பண முடிப்புகளை விட விலை உயர்ந்தவை, வலுவுடையவை!

# கட்சி

கொள்கைக்காகத்தான் கட்சி. கட்சிக்குள்ளே நுழைந்து விட்டவர்களெல்லாம் கொள்கையாளர் என்று கூறிவிட முடியாது.

ஒரு கட்சியை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டுமானால் அதனுடைய கொள்கைக்குச் செல்வாக்குத் தேடவேண்டும். கொள்கையின்படி நடப்பவர்களை மதிக்க வேண்டுமேயொழிய அவரிடம் அண்டினால் பணம் தட்டலாம் என்று பார்ப்பது?

அரசியல் கட்சிகள் என்ற எண்ணம் ஏற்பட்டதே நல்லவர்கள் அரசியலில் ஈடுபடமுடியும். அரசியலை நல்லதாக ஆக்க முடியும் என்ற நம்பிக்கை வந்தபிறகுதான்.

அரசியல் கட்சிகள் ஏற்படுத்தலாம் என்ற எண்ணம் ஏற்பட்டதற்கு முக்கிய காரணம் மக்களே அரசியலை நடத்த ஆரம்பித்ததால்தான் உண்மையில் அவர்களது வாழ்வு துவங்கும் என்று கருதியதால்தான்.

திட்டங்கள் நிறைவேறுவதற்கு அரசியல் கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்றால் திட்டங்களைத் தீட்டுகின்ற போது அந்த எண்ணம் இருந்தால்தான் திட்டம் வெற்றிபெற முடியும்.

கட்சி என்றால் பதவி, இல்லையேல் கௌரவ நிலை. அதுவும் தவறினால் அதிகாரிகளிடம் பழகும் அந்தஸ்து, அதுவும் இல்லையேல் காண்ட்ராக்ட்டு என்று சிலர் எண்ணுகின்றனர் அப்படிப்பட்ட கட்சி நமக்குத் தேவையில்லை

எந்த அரசியல் கட்சிக்கும் ஊர் மக்கள் உள்ளத்திலே உன்னத இடம் கிடைக்க வேண்டுமானால் அந்தக் கட்சியினர் வீரர்கள் மட்டுமல்ல விவேகிகள் என்று மாற்றுக் கட்சியினரும் கூறும் விதத்தில் அந்தக் கட்சித் தோழர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

ஒரு வீடு கட்டுவதற்கு செங்கல் பலம் இருந்தாலும், செங்கல் சுவரில் சாந்து வைத்துப் பூசுவது எப்படிக் கெட்டியாக இருக்குமோ அதேபோல ஒருவருக்கொருவர் பாசம் இருந்தால் தான் ஒரு இயக்கம் நல்ல பலம்பெற்று வளரமுடியும்.

ஆட்சி பீடம் ஏறுவது எந்தக் கட்சியின் உண்மையான வாழ்வுக்கும் தொடக்கமே தவிர முடிவு அல்ல. அதிகாரம் கிடைத்ததும் இனித்தொடங்க வேண்டியதுதான் அடக்குமுறையை என்று எண்ணுவது ஆபத்துக்கு அச்சாரம் தரும் அசட்டுத்தனமே தவிர அறிவுடைமையல்ல.

ஒரு மாநாட்டில் பேசி பெயரெடுப்பது எளிது. அதேபோல் மாநாட்டில் கடைவைத்து நல்ல மிச்சமும் கண்டுவிடலாம். ஆனால் தொண்டாற்றி நல்ல பெயரெடுப்பது கடினம்.

தடைகளைக்கண்டு தயங்கினால் எடுத்துக் கொண்ட காரியத்தை எந்தக் காலத்திலுமே நிறைவேற்ற முடியாது. தடைகளின் தன்மையை அறிந்து அதற்கேற்பபணியாற்றினால் மட்டுமே வெற்றிகாண முடியும்.

மக்களை அணுகி ஓட்டுவாங்கவும் தெரிய வேண்டும். மார்புக்கு நேரே துப்பாக்கிக் குண்டு பாய வருகிறது என்றால் அதைத் தாங்கிக்கொள்ளவும் துணிவு இருக்க வேண்டும்.

# ஏடுகள்

மானத்தோடு வாழ ஒருவனை ஒருவன் தாழ்த்தாமல் வாழ்வதற்கு உரிய ஏடுகள் தேவை. சுவையும் பயனும் எதில் இருந்தாலும் எடுத்துக் கொள்ளுங்கள். பயன் மட்டுமிருந்து சுவையில்லாமல் இருக்கக் கூடாது, சுவை மட்டுமிருந்து பயனில்லாமல் இருக்ககூடாது.

உங்களுக்குத் தமிழ் மொழி வளர வேண்டுமென்ற மனப் பான்மை மட்டும் இருந்தால் போதாது. சுவையும், பயனும் உள்ள ஏடுகளையே படிக்கவேண்டும்.

வாயில்லாப் பூச்சிகளாகப் பெரும்பான்மையினர் இருந்த போது தீயில் குதித்தேனும் தீட்டுவேன் திருப்பாதை என்று தீவிரமாகப் பணியாற்றினர் திடநெஞ்சம் படைத்த சிலர்.

அதன் விளைவு தான் இன்று மனித சமுதாயம் பெற்றுள்ள பேச்சுரிமை - எழுத்துரிமை.

எல்லாப் புத்தங்களையும் விட சிறந்த புத்தகம் இந்த பரந்த உலகம் தான். உலகத்தை விட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.

சமய மெனும் மூளையிலே தமிழ் நட்டால் முளைக்காது.

தமிழே இசையுருவாக அமைந்தது. இசையே தமிழில் தான் முதன் முதலில் தோன்றியது.

கருத்துள்ளோர், காலம் காட்டும் குறிகளைக் கண்டு திருந்த வேண்டும். காகிதக் கணைகளையே நம்பிக் கொண்டு இருந்து விடக் கூடாது.

இன்றைய புலவர்கள் உண்மையிலேயே இனிமையும் எளிமையும் சங்க இலக்கியத்துடன் சேர்த்து மக்களுக்கு ஊட்டியிருப்பார்களானால், அவர்கள் ஒவ்வோர் இல்லத்தையும் இலக்கியப் பூங்காவாக்கும் உழவர்களாக இருந்திருக்க வேண்டும்.

சங்க இலக்கியங்கள் மங்கி மக்களுடைய மனதைப் பெறுமல் போனதற்குக் காரணம் அந்தச் சங்க இலக்கிய கர்த்தாக்களை காண முடியாதபடி கண்முன் திரை போட்டு விட்டார்கள்.

காலம் என்னும் சிறையிலிருந்து தன்னை விடுதலை செய்து கொள்ளாதவன் சிறந்த கவியாக மாட்டான்.

நமக்குக் காமரசம் கலவாத, மதம் கலவாத மதியை வளர்க்கும் இலக்கியங்கள் தேவை. காலத்துக்கும் கருத்துக்கும், நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் தொடர்புள்ள ஏடுகள் தேவை.

திருக்குறள் பூஜா மடத்துக்கும் மட்டும் தயாரிக்கப்பட்ட தில்லை. புனைந்துரைகள் நெளியும் புராணமல்ல, வாழ்விலே தூய்மையை அவரவர் தத்தமது திறனைச் சரியாகப் பயன் படுத்தி மற்றவரின் வாழ்வின் மேம்பாட்டினையும் மதித்து ஒழுகுவ தன் மூலம் பெறக் கூடியது என்ற பெருநெறியைக் காட்டும் நூலாகும்.

# மேடைப் பேச்சு

மாற்றான் வீட்டுத் தோட்டத்திலே பூத்திடும் மல்லிகைக்கும் மணமுண்டு - ரசிக்கத்தான் செய்வோம். அது போலத்தான் பேசுபவரின் கருத்து பயன் தருமாயின் கேட் போரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும் கேட்பவர் கள் ஏற்றுக் கொள்வது உறுதி !

இலட்சியப் பிடிப்பு, கொள்கைப் பற்றில்லாதவன் சிறந்த பேச்சாளனாக இருக்க முடியாது. அவன் குழப்பப் பேச்சுக்காரனாகத்தான் இருக்க முடியும்.

பேசுகின்ற பேச்சாளிக்கும், பேச்சைச் கேட்கின்ற மக்களுக்கும் தொடர்பு இருக்க வேண்டும். அப்போதுதான் பேசுகின்றவர்களுக்கும் சரி, கேட்கின்றவர்களுக்கும் சரி பொறுப்பு இருக்கும்.

பல திறப்பட்ட கருத்துக்கள் உலவி, ஒன்ருெடொன்று போரிடும் தன்மை படைத்தோர் போர்க்களம்தான் பேச்சு மேடை. அந்தக் களத்திலே பரிசும் உண்டு. பகையும் உண்டு.

✵

ஜன நாயகம் வளர வளர மேடைப் பேச்சின் முக்கியத்துவம் வளரும். இதன் முக்கியத்துவம் வளர வளர இதனைக் கொண்டு தன்னலம் வளர்க்கும் ஆபத்து வளரும். அந்த ஆபத்தைத் தடுக்க வேண்டுமானுல் மக்களில் பெருவாரியானவர்கள் அந்தச் சக்தியைப் பெற்ருக வேண்டும்.

✵

தூய்மையான நோக்கமும், தெளிவான அறிவும். கொள்கை வெல்லும் என்ற நம்பிக்கையும் இருக்குமானுல் தொடக்கத்தில் தட்டுத்தடுமாறிப் பேசும் மேடைப் பேச்சும் நாளாவட்டத்தில் வீர முழக்கமாக மாறியே தீரும். ஆம்! நிச்சயம்.

✵

பேச்சு, மேடையில் பெரும் புகழ் பெற விரும்புவோர்க்கு அச்சம், தயை, தாட்சண்யத்துக்குக் கட்டுப்பட்டு கருத்தை அடகு வைக்கும் குணம் இருத்தலாகாது. காட்டுக் குதிரையின் மீதேறிச் செல்லும் முரட்டு சுபாவமும் இருத்தலாகாது.

✵

மலர் கொண்டு மாலை தொடுத்தலின் கைத்திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனுல் கைத்திறன் முழுவதும் காட்டிக் காகிதப் பூ மாலை தொடுத்தால் பயன் என்ன? பேச்சுக்கு அழகு தேவைதான். ஆனுல், அழகு மட்டுமே இருந்து கருத்து இல்லையானுல் என்ன பயன்?

✵

மேடைப் பேச்சு என்பது காலட்சேபமல்ல. வசன சங்கீதமும் அல்ல. இனிமைச் சுவை எல்லோருக்கும் அளிக்கும் நாவாணிபமும் அல்ல. கை கட்டிக் கேட்கும் மக்கள் எதிரே நடத்தும் உபதேசமுமல்ல. உயிர்ப் பிரச்சனைகளைப் பற்றிய கருத்துக்களை வெளியிடும் களம் மேடை!

கதம்ப மாலையில் மலர் குறைவாகவும், தழை அதிக மாகவும் இருப்பின் அதனை மாதர் கொள்ளார் அது போலவே மேடைப் பேச்சில் கருத்து. அதனை அங்கொன்றும் இங்கொன்று மாகி சுவைக்குதவாதன அதிகமாக இருப்பின் அதனை எவரும் கொள்ளார்.

பேச்சு - கருத்தின் தொகுப்பு. சிந்தனை காண்பன கேட்டனவற்றிலே தொடர்ந்து ஏற்படும்.

## தூற்றல்

விட்டில் பூச்சி விளக்கில் விழுகிறது. விழுந்த பூச்சி எழுவதில்லை.

மலத்திலிருந்து எரு கிடைக்கிறது. அந்த எரு விட்டால் மணம் கமழும் பூச்செடி மலருகிறது. உள்ளத்தை மலமாக்கிக் கொண்டவர்கள் தூற்றலை நம் மீது தூக்கி எறிகிறார்கள். அந்தத் தூற்றல் எரு நமக்கு வெற்றி என்ற மல்லிகையைத் தரும்.

வானத்து நட்சத்திரம் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டால் ஏற்றி வைத்த அகல் விளக்கு அணையப் போகிறது என்பதைப் பற்றி யாருக்குக் கவலை?

அடுப்பிலே சாதம் தள தள வென்று கொதிக்கும். கொதிக்கின்ற போது சாதம் வேகவில்லை என்பது தாய்மார்களுக்குத் தெரியும். கொதித்து அடங்கியதும் தான் சாதம் வெந்துவிட்டது என்பதை அறிவார்கள். வேகாத பண்டங்கள் - வேகாத அரசியல் கருத்தைக் கொண்டவர்கள் வயிற் றெரிச்சலால் கொதித்துத்தான் பேசுவார்கள்.

குரோட்டன்ஸில் குண்டு மல்லிகை பூக்காது.

மோரிலிருந்துதான் வெண்ணெய் எடுக்க முடியுமே தவிர பன்னீரிலிருந்து கூட எப்படி எடுக்க முடியும் ?

பண்பு தெரிந்தவர்கள் பாராட்டுகிறுர்கள் அது இல்லாதவர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டாம்.

வீசப்படுபவை வீழ்ந்துவிடும். நிலைத்து நிற்பது நிமிர்ந்து நிற்கும்.

மதிப்பு

மதிப்பு காட்டுவது என்பது இருவகைப் படும். எதிரில் வாயாரப் புகழ்ந்துவிட்டுத் தலை மறைந்ததும் மாருகப் பேசுவது ஒருவகை ! பழகாவிட்டாலும், கூடாரத்தில் இல்லாவிட்டாலும் பிறரின் பண்பினை தனித்திருக்கிற நேரத்தில் எண்ணி மகிழ்வது இரண்டாவது வகை.

# எழுச்சி

தாழ்ந்து கிடக்கின்ற ஒரு இனம் தன்னுடைய நிலையைத் தெரிந்துகொண்டு எழுச்சி பெறுவதற்கான ஒரு காலம் பிறக்கின்ற நேரத்தில் மிகச் சாதாரண மனிதனும் அந்தஇனத்தைச் சேர்ந்தவன் என்கின்ற காரணத்தினுலே உயர்த்தப்படுகின்ருன்.

எழுச்சி அந்த தனிமனிதனுடைய ஆற்றலை மட்டுமே நம்பி அமைவதில்லை. அப்படித் தமக்கு ஒரு தனி ஆற்றல் இருப்பதாக எவரேனும் நம்பத் தொடங்கினுல் இருக்கும் ஆற்றலும் கெட்டுவிடுகிறது என்றுதான் பொருள்படும்.

நாட்டுப்பற்று என்பது பல்வேறு வகையான பற்றுக்களின் கூட்டு. மொழிப்பற்று என்பது மற்ற எந்தப் பற்றைக் காட்டிலும் மெய்யுணர்வு அற்றது அல்ல - எழுச்சிக் குறைவானது அல்ல.

மக்கள் எழுச்சியின் முன் எந்தக் கொடுமைதான் நிலைத்து நிற்க முடியும்?

அறப்போர் என்பதும் தியாக புத்தி என்பதும், ஆவேசமாகப் பேசுவதும், தடியடிபட்டுச் சாவதும் மட்டுமே அல்ல. நமது போராட்டத்தின் பயனுக தியாகத்தின் பயனுக உடனடி பிரச்சனை தீர வழிவகை இருக்க வேண்டும். ஏற்பட வேண்டும்.

பொது வாழ்வு புனிதமான பூமி. அந்தத் தியாக பூமியில் உலவுபவர்கள் புகழுக்காகப் புளுகு மொழி பேசும் புலவர்களாக இருக்கக் கூடாது. ஊர் முழுவதும் எதிர்த்தாலும் உண்மை யையே உரைத்திடும் அஞ்சா நெஞ்சர்களாக இருக்க வேண்டும். ஆற்றல் வீரர்களாகத் திகழ வேண்டும்.

நமக்கென்ன என்று கூறும் சுயநலமிகளும், நம்மால் ஆகுமா என்று பேசும் தொடை நடுங்கிகளும், ஏன் வீண்வம்பு என்று சொல்லும் கோழைகளுமல்ல நாட்டுக்குத் தேவை. வீரர்கள் தேவை. உறுதி படைத்த உள்ளங்கள் தேவை.

பொதுவாக நாட்டு மக்களைத் திருத்துவதற்குமுன் இவர் களுடைய சூழ்நிலையைக் கவனிக்கவேண்டும்.

புரட்சி என்பது இயங்கும் சக்தி. புரட்சி மக்களின் போராடும் சக்தியின் வழிவருவது. புரட்சி வாலிபத்தின் கூறு. பகுத்தறிவின் ஆயுதம்.

அசசமும் அவநம்பிக்கையும் பெற்றெடுக்கும் குழந்தையே பயங்கரப் புரட்சி

ஒருசிலர் ஓயாது உழைத்து-சலிப்பு, கோபம், வெறுப்பு, பகை என்னும்உணர்ச்சிகளுக்குப் பலியாகிவிடாமல் புன்னகை யும், பெருமூச்சும் கலந்த நிலையில் பணிபுரிந்து, பட்டமரம் துளிர்விடும் வரையில் பாடுபட்டு வெற்றிகண்டு மறுமலர்ச்சியை உண்டாக்கி வைக்கிறார்கள்.

# ஒ ற் று மை

ஒருமைப்பாடு பெற்ற மக்கள் சமுதாயம்தான் நாடாகிறது. அப்படி ஒரு நாடு உருவாகியிருந்தால் ஒருமைப்பாட்டிற்கு இப்போது என்ன அவசியம் வந்தது ?

மக்கள் ஒன்றுபட்டபின் ஒருமைப்பாட்டிற்கென்ன வேலை ?

கால வெள்ளத்தில் மறைந்து போய்விட்ட தத்துவங்களின் வறுமைதான் தேசீய ஒற்றுமை.

தேசிய உணர்ச்சி உருவானதும் அதனை முதலாளிகள் விலைக்கு வாங்குவார் என்பதும் முதலாளியின் கைச்சரக்கானதும் அதனை ஏகாதிபத்தியம் தோழமை கொள்ளும் என்பதும் அரசியல் அரிச்சுவடியாகும் !

இந்திய தேசியம் என்பது ஒரு இரவல் சரக்கு. தமிழ்ப் பற்று என்பதுதான் சொந்த சரக்கு. இது நமது தலைமுறை தலைமுறையாக வந்த பண்பு. நம் இன அடிப்படையில் வளர்ந்த பண்பை நம்மாலே ஒருபோதும் நீக்கமுடியாது. நீக்கினால் நமக்கும் நஷ்டம், உலகுக்கும் நஷ்டம்.

‘ ஒரு நாட்டில் ஒற்றுமை உண்டாக்க மொழி ஒன்றுதான் அடிப்படையா?’ என்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஒற்றுமை உண்டாவதற்கு மொழி ஒன்றுதான் தடையாக இருக்கிறதா?-நிச்சயமாக இல்லை.

# சட்டமும் திட்டமும்

சட்டங்களை நிறைவேற்றினல் மாத்திரம் போதாது. நடத்துகின்ற நிர்வாக இயந்திரம் பழுதுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஏட்டில் திட்டங்களைக் காட்டுவதால் மட்டிலும் பாராட்டுதலுக்குரியவர்களாகி விடமாட்டார்கள். நாட்டை ஆளுகின்ற சர்க்கார், ஏட்டில் போடுகின்ற அளவுக்கு ஒவ்வொரு வீட்டிலும் இதற்கு முன்னுல் இருந்ததைவிட வயிற்றுக்கு ஒரு கவளம் சோறு அதிகமாக இருக்கிறது என்பதைக் கணக்கெடுத்துப் பார்க்கவேண்டும்.

சட்டம் ஓர் இருட்டறை! அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு! அந்தப் பிரகாசமான விளக்கை ஏழைகளால் பெற முடிவதில்லை.

கட்டுப்பாடும், ஒழுங்கும் கட்டாயம் நமக்குத் தேவை. இவை சாதாரணமானவைதான். ஆனுல் இம்மாதிரி சாதாரண விஷயங்களைக் கொண்டுதான் ஒரு சமூகத்தை எடைபோட முடியும்.

உள்நாட்டிலே மக்களின் உள்ளம் குளிரும்படி ஆட்சி நடத்தினுல் நிரந்தரமான பெருமையும், நிலையான செல்வாக்கும் கிடைக்கும். நேத்திரானந்தத்தால் பலன் என்ன?

வரி இல்லாமல் நாட்டை ஆள்வது கடினம் ஆனுல் வாங்குகின்ற வரி மக்களை வாழவைக்கவேண்டுமே தவிர வாட்டி வதைக்கக் கூடாது.

திட்டங்கள் நிறைவேறுவதற்கு அரசியல் கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென்றால் திட்டங்களைத் தீட்டுகின்ற போதும் அந்த எண்ணம் இருந்தால்தான் திட்டம் வெற்றிபெற முடியும்.

✱

சட்டங்கள் சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்ப அமைந்திருக்க வேண்டும். அப்படி யிருந்தால்தான் மக்கள் தாமாகவே கீழ்ப்படிந்து நடப்பார்கள். சட்டத்தை அமுல் நடத்துவதிலும் சிரமம் இருக்காது.

✱

திறமையுள்ளவர்கள் சட்டம் செய்தால் அதற்கு அடிக்கடி திருத்தங்கள் செய்யவேண்டிய அவசியமிராது.

✱

அரசியல் சட்டம் என்பது புனிதமாகப் போற்றப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால் அதற்குக் கூட்டத்துக்கு கூட்டம் திருத்தங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை இன்னும் பத்தாண்டுகளுக்கு நீடித்தால் இந்தியாவில் சன நாயகம் பாதுகாப்பாக இருக்காது.

# தொழிலாளி

தொழிலாளி வெறும் உழைப்பாளியாக மட்டும் இருக்கும் நிலைமாறி அவன் தொழிற்சாலைகளிலே பங்காளியுமாக்கப் பட்டால் விஞ்ஞானத்தைத் தன் கூட்டாளி என்று உறவு கொண்டாட முடியும்.

✱

பொதுநலம் பாட்டாளி ஆட்சியிலே தான் மலர முடியும் அந்த ஆட்சியின் வெற்றியினால் மட்டுமே உழைப்பு ஊராளிக்கு

காரியமாகாது தடுக்கவும், விஞ்ஞானம் விபரீதத்தைப் பொழியாது நன்மைகள் பயக்கக் கூடியதாக அமையும் வழி பிறக்கும்.

✵

ஏர் கொண்டு சீர் அளிக்கும் உழவனின் உள்ளம் குமுறிக் கிடக்கின்றது. எனவே தான் ஏர் முனை மழுங்கிக் கிடக்கின்றது. உற்பத்தியும் சுருங்கிக் கிடக்கின்றது.

✵

உலகம் உழைப்பாளிகளுக்கே - உலுத்தர்களுக்கல்ல ! பிறர் உழைப்பை உண்டு கொழுப்பவர்கட்கல்ல !

✵

காடு நிலமானதும், வனம் தோட்டமானதும், மேடு மாளிகையானதும், கரம்பு ஊற்றுனதும், பள்ளம் பாதையானதும் பாட்டாளியின் உழைப்பினுல் ! ஆனுல், அவன் அந்த உழைப்பிற்குப் பிறகு அதனுலான உல்லாசங்களை அனுபவிக்கின்றுனு ?

✵

பொருளாதார ஏற்றத்தாழ்வை யொட்டித் தொழிலாளியின் வாழ்வு இருக்கிறது. அதைப் போல் அரசியலை யொட்டியும் தொழிலாளி இருக்கிறுன்.

✵

அரசியலை நீக்கித் தொழிற் சங்கத்தைப் பார்க்க முடியாது. தொழிற் சங்கத்தை நீக்கி அரசியலைப் பார்க்க முடியாது.

✵

உலக அரங்கில் மிக முக்கியமானதாகவும், பலருடைய மனதை மருட்டக் கூடியதாகவும் தொழிலாளர் பிரச்சனை வளர்ந்து விட்டது. நீதியையும், நேர்மையையும் சமுதாயத்தில் அமைதியையும், சுபீட்சத்தையும் விரும்பும் எவரும் தொழி

லாளர் பிரச்சனையை அலட்சியப் படுத்தியோ அல்லது அடக்கு முறைகளால் அழித்து விடக் கூடுமென்றே எண்ண முடியாது.

*

வேலை மனிதத் தன்மையை மாய்க்காத அளவு இருக்க வேண்டும் - வேலை நேரத்தைமட்டுமல்ல; வேலை முறை தன்னம் வேலை செய்பவனுக்கு வேலை நேரத்தில் வேலைக்குத் தேவையான வசதிகளைத் தருவது எல்லாவற்றையும் சேர்த்துத் தான்.

*

வேலை நிறுத்தம் என்பது தொழிலாளியின் வீம்புப் போராட்டமல்ல - இரத்தக் கண்ணீர் - அவனுடைய வேதனைப் புயல் - அவனுடைய இல்லத்திலே குமுறியெழும் விம்மலின் எதிரொலி !

*

தொழிலாளர் உலகின் வேலை நிறுத்தம் வெறும் பொழுது போக்கு அல்ல. ஆபத்துக்குத்தாமதமாக அச்சாரம் தரும் துணிவு பிறந்த நிலைமை. அந்தத் துணிவும் எளிதில் ஏற்பட்ட சிறிய சம்பவமல்ல. தாங்க முடியாத வறுமையின் விளைவு.

## முதலாளித்வம்

முதலாளித்வம் ஒரு மதம் பிடித்த யானை. அந்த யானையைப் பிடித்து வாழை நாரினால் துதிக்கையைக்கட்டி அந்தக் கயிற்றை வாழை மரத்தில் கட்டிவிட்டுப் பார் பார் நான் முதலாளித்வத்தைக் கட்டிப் போட்டு விட்டேன் என்று கூறினால் சரியாகாது.

*

கோடி கோடியாக லாபம் குவித்தாலும் முதலாளி மார்கள் குமுறும் தொழிலாளியிடம் குளிர்ந்த முகத்துடன் நடக்க முன் வருவதில்லை.

*

அவசியமானது - ஆகவே செய்யப்பட வேண்டியது என்பதல்ல முதலாளித்வம். லாபகரமானது ஆகவே செய்யப்பட வேண்டியது என்பதுதான் முதலாளித்வம்.

பரம்பரை பரம்பரையாக ஏழைகள் முதுகுமீது ஏறிச் சவாரி செய்து வந்தோமே இனியும் செய்வோமே என்று முதலாளிகள் எண்ணக் கூடாது. ஏனெனில் இக் காலக் குதிரைகள் கொஞ்சம் இடக்கு பண்ணிக் கொண்டு வருகின்றன. முன் போல இல்லை !

நிலமற்ற கூலி விவசாயி, உழைக்கவராத பண்ணை முதலாளி இப்படி இருசாரார் இருக்குமட்டும் நாட்டின் செல்வ நிலையும் உயராது, விவசாயமும் செழிக்காது. கிராமப் புறமும் வளமாக இராது. அங்கே வறுமையும் ஒழியாது.

பணக்கார உலகம் இருக்கிறதே அது மிகவும் விசித்திர மானது. பணம் மட்டும் இருந்து விட்டால் அங்கே முட்டாள் களும் புத்திசாலியாகப் போற்றப் படுவார்கள்.

பாடுபடுபவன் ஒருவன் – பட்டா உரிமை பெற்றவன் வேறொருவன், உழுது பயிரிட்டு அறுவடை செய்பவன் ஒருவன்– அறுவடைக்குப் பிறகு அளந்து பார்த்து அகமகிழ்பவன் வேறொருவன். இந்த நிலை இருக்கும் வரையில் சங்கடம் தான் விளையும். இந்தியாவின் சஞ்சலங்கள் தீராது.

ஒரு சிலரிடம் செல்வம் குவிந்து விடுவதுதான் பண வீக்கத்துக்கான முக்கியமான காரணங்களில் ஒன்று.

முதலாளித்துவ முறை லாபம் கிடைக்கும் வரையில் வேலை தரும் தொழிலாளர்களுக்கு. லாபமில்லையேல் வேலையுமில்லை என்று கூறிவிடும்.

*

ஓய்வு சிலருக்கு வேலை பலருக்கு என்ற முறை மாறினாலொழிய சமூக உயர்வுக்குப் பயன்படும் பண்பு ஆக முடியாது. வாழ்க்கைத் தரம் மட்டமாக இருக்கும் சமூகத்தில் ஓய்வு கிடைத்துப் பயனில்லை. பொருளும் இல்லை.

# பொதுக் கடமை

கட்சி என்பது ஒன்று - அரசு என்பது மற்றொன்று. நாடு என்பது வேறு. கட்சி ஒன்று இருந்து நாளை மறையலாம். அரசு நிரந்தரமானதாக இருக்கலாம். அரசையும் மீறியது நாடு. அதற்கு "நைந்து" என்றால் உடனடியாகத் தடுத்து நிறுத்துவது நாட்டு மக்களின் பொதுக் கடமையாகும்.

*

கதவைச் சாத்தும் போது இடுக்கிலே அகப்பட்ட விரலைக் கதவு நசுக்கிவிட்டது என்றால் உடனே கதவு மீது கோபித்துக் கொண்டு அதைச்சாத்தாமல் விட்டுவிடமாட்டார்கள். அப்படித் திறந்து போட்டு விட்டால் வழியிலே போகும் நாயெல்லாம் உள்ளே நுழைந்துவிடும். அதைப் போல் ஆட்சியாளர் செய்த கொடுமை மக்களுக்காகக் கோட்டைக் கதவைத் திறந்து வைக்காமல் நன்றாகத் தாளிட்டு எதிரி நுழைய முடியாதபடி செய்ய வேண்டும்.

*

வீடு இருந்தாலல்லவா ஓடு மாற்ற முடியும் அதைப் போல் நாடு இருந்தால்தான் நம் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியும். வீட்டுக்கே அல்லவா ஆபத்து வந்திருக்கிறது.

*

வீடு எங்ஙனமோ அங்ஙனமேதான் நாடு இருக்கும்.

## அரசியல்வாதி

ஒரு அரசியல் வாதிக்கு எல்லாவற்றிலும் கொஞ்சம் தெரிந்திருக்கவேண்டும். சிலவற்றில் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும்.

❋

போதிய அறிவாற்றல் இல்லாதவர்கள் பல்வேறு காரணங்களுக்காகச் சட்ட மன்றங்களுக்கு வருகிறார்கள் என்பது உண்மையே!

## சன நாயகம்

சனநாயகத்தைப் பொறுத்தவரையில் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையும், அரசாங்கத்தின் குறிப்பிட்ட செயலுக்குப் பொது மக்களின் ஆதரவும் உண்டா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளும் வாக்கெடுப்பு முறையும் இந்தப் பெரிய உபகண்டத்தில் அமுலாகாத வரை சனநாயகத்திற்கான எந்தப் பலனையும் எதிர்பாக்க முடியாது.

❋

சன நாயகம் என்றுமே தோற்றதில்லை. சர்வாதிகாரம் என்றுமே வென்றதில்லை.

❋

சன நாயகம் சிரித்த முகத்தோடு இருக்கும். ஆரம்பச் சூரத்தனம் அதனிடத்தில் இருக்காது. எனினும் அது ஆழ்ந்த ஆறு போன்றதாகும். அதில் ஆழம் தெரியாது இறங்கினால் அமுழ்ந்திப் போவார்கள்.

❋

சன நாயகத்துக்குத் தாங்கும் சக்தியும் உண்டு. தாக்கும் சக்தியும் உண்டு !

சனநாயகத்தில் தவறு இழைக்க வழி இருக்கிறது. அதைத் திருத்தவும் மக்களுக்கு உரிமையுண்டு.

மக்களுக்கும் அரசுக்கும் இடையில் உள்ள இடைவெளி மிக நீளமாக இருப்பது சர்வாதிகாரம். சன நாயகத்தில் அந்த இடைவெளியில் சென்றுவர மக்களுக்கு மார்க்கமுண்டு.

பாராட்டுதல் சன நாயகத்தில் சாதாரணம் தான். ஆனால் அது அளவிற்கு அதிகமாகப் போய் விடக்கூடாது.

சன நாயகம் வளர்ந்துள்ள இந்த நாளில் கட்டளையிடும் தலைவர்கள் தோன்றமுடியாது. தோன்றவும் கூடாது. சன நாயகம் இல்லாவிட்டால் அரசியலால் பலன் ஏதுமில்லை.

ஒரு சனநாயக நாட்டில் - நாகரிகமறிந்த சன நாயக வாதியின் கடமை, பல் வேறு பற்றுக்களில் வரிசை முறை காண்பதுதான். எந்த ஒரு பற்றும் மற்ற ஒரு பற்றுக்கு மாற்று ஆகிவிடாது.

மாற்றுக் கட்சி இல்லாத சனநாயக சர்க்கார் பிரேக் இல்லாத கார்-கரை இல்லாத ஆறு-மூக்கணாங் கயிறு இல்லாத மாடு! ஆகவே, ஆளும் கட்சிக்கு அது அடக்குவாரற்று அக்கிரமம் செய்யும் கட்சியாக மாறுமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள ஒரு மாற்றுக் கட்சி தேவை.

MARAIMALAI ADIGAL

# சோசலிசமும் சமதர்மமும்

சோசலிசம் என்பது சேமநலம் மட்டுமல்ல. சேம நலத்திற்கு உறுதி தருவது மட்டுமல்ல; சமத்துவத்தை உண்டாக்கப் பாடுபடுவது சோசலிசம்.

எல்லோரையும் ஒரே மாதிரியாக நடத்துவதல்ல. எல்லோருக்கும் சமவாய்ப்பு தருவதாகும்.

நமது குறிக்கோள் சகலரும் சமுதாயத்தின் சம உரிமையோடு வாழவேண்டும்.

நாடு நலம் பெற வேண்டுமானுல் உற்பத்தி அதிகரிப்பதுடன் அதனை அனைவரும் அனுபவிக்கக் கூடியதான அமைப்பு இருக்கவேண்டும் அதாவது சமதர்மம் நிலவ வேண்டும்.

பொதுவுடமை வாழ்வு என்ருல் என்ன என்று கேட்கிறீர்களா? அது ஒரு புத்தம் புதிய நிலை, புண்ய பாவத்தை விரட்டிய நிலை, தத்தளிப்பதைத் தவிர்த்த நிலை, தாசர் நீசர் என்னும் பேச்சை ஒழித்த நிலை, ஏழ்மை, வறுமை இல்லாத நல்ல நிலை.

அரசியலில் சமத்துவம் ஏற்பட்டு விட்டால் மட்டும் சமூகத்தில் உள்ள பேதங்கள் போய் விடுவதில்லை. அந்தப் பேதங்கள் போகாத வரை சமதர்மம் என்ற இலட்சியம் கனவில் காணும் காட்சியாகத்தான் இருக்கமுடியும்.

ஒரு சிலரின் ஆசைக்கு மிகப் பலரை பலியாக்குவதுதான் முதலாளித்துவத்தின் முடிந்த கொள்கை. சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி என்பதுதான் சமதர்மத் திட்டத்தின் அடிப்படை நோக்கம்.

மாளிகைக் கருகே மண் மேடு இருக்கக் கூடாது. மந்தகாச வாழ்வுக்கருகே மனிதப் புழுக்கள் உலவக் கூடாது. சோம்பேறிச் சீமான்கள் ஓர் புறமும், சோர்ந்து விழும் அனாதைகள் மற்றோர் புறமும் இருக்கக் கூடாது. இதற்குப் பெயர்தான் சமதர்மம்.

ஜாதி, மத, குல பேதங்கள் நம் மக்களை முன்னேற ஒட்டாதபடி மூச்சுத் திணறும்படி, முதுகெலும்பை முறிக்கும்படி அழுத்துகின்றன. இந் நிலையில் நம் நாட்டில் சமதர்மம் மலருவதெங்கே? சமத்துவம் தோன்றுவதெப்படி? அதன் முழுப் பயனாகிய தோழமையைக் காண்பது எங்ஙனம்?

சமத்துவம், சமதர்மம் போன்ற இலட்சியங்களைப் பேசுவது சுலபம். சாதிப்பது கடினம்.

# அக இயல்

# பழமையும் - பகுத்தறிவும்

சமுதாயத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக உருக்கி ஊட்டப்பட்டிருக்கும் பழக்க வழக்கம் சமூகத்தை ஒரு சறுக்கு மரமாக்கி விட்டது. அதிலே தம் இஷ்டப்படி செல்ல விரும்பிச் சறுக்கி விழுந்தவர்கள் கோடி கோடி !

✱

மக்கள் சடங்குகளைத் தள்ளி விடுவதைக் கண்டு சங்கடப் படுவதும், பழைய வழக்கங்களை விட்டு விட்டோம் என்பதற் காகப் பதை பதைப்பதும் அர்த்தமற்றதாகும்.

✱

அந்தக் காலம் என்பது முடிவற்றது. அளவிட்டுக் கூற முடியாது. அளக்க அளக்க நீண்டு கொண்டு போகிற கெசக் கோல் அது.

✱

பழைய கருத்துக்களை நாம் படிக்கலாம். ஆனால் அவற்றை நாம் கைக் கொள்ளுதல் கூடாது.

✱

புதிய கருத்துக்கள் பல தோன்ற வேண்டிய நேரம் இது. வேறு லோகத்திலே இருப்பதைப் பற்றிய சந்தேகங்களை வளர்த்துக் கொள்வதால் பயனில்லை !

✱

வாடிய மலரை வீசி எறிகிறோம். உடைந்த கண்ணாடிப் பாத்திரத்தைக் குப்பை மேட்டில் வீசுகிறோம். ஆனால் அர்த்தமும், அவசியமும் அற்றுப் போன பழங்காலச் சடங்குகளை மட்டும் இன்னும் விட்டுவிட மறுக்கிறோம் - இருக்கலாமா?

பாலாடையில் பருகிய குழந்தை பிறகு கோப்பையைத் தொடும் குமரன் ஆகிறான். தொட்டிலில் இருந்த பிறகு கட்டிலில் ஏற வேண்டி வருகிறது. அவை போலத்தான் பழையன கழிதலும் புதியன புகுதலும் வழு அல்ல. அது கால வகை.

வைரம் ஜொலிக்க வேண்டுமானால் சாணை பிடிக்கத்தான் வேண்டும். தங்கம் பிரகாசிக்க வேண்டுமானால் தணலில் காய்ச்சத்தான் வேண்டும். அதுபோல நல்வாழ்வு பெற வேண்டுமானால் நாம் பகுத்தறிவுப் பாதையில் செல்ல வேண்டும்.

பேய் என்று ஒன்று கிடையாது. நோய்தான் பேய் ஆக்கப்பட்டு விட்டது.

பகுத்தறிவு என்னும் மருந்தால் வைதீகம் என்னும் நோயைப் போக்க முடியும்.

காலம் மாறக் கூடியது, மாறிக் கொண்டேதான் இருக்கும். காலத்திற் கேற்பக் கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.

முன்னோர்கள் இவ்வழி சென்றனர். எனவே அடியேனும் அவ்வழியே என்று ஆராய்ந்துசொல்வது விஷய விளக்கமுமல்ல

விவேகமுமல்ல, வாதமுறையும் ஆகாது. கேவலம் அது மூட நம்பிக்கை.

ஓடிவரும் வெள்ளத்தைத் தடுக்க ஒரு சாண் கல்லை, வைத்தால் ஒரு போதும் வெள்ளம் நின்றுவிடாது. அது போலத்தான் வேகமாகப் பரவிவரும் பகுத்தறிவுக் கிளர்ச்சியைப் புல்லர்கள் சிலரின் எதிர்ப்பு ஒரு நாளும் பொசுக்கி விடாது

# சாதிபேதமெனும் சனியன்

இந்த மாபெரும் சனியனுன சாதிமதபேதத் தொல்லைகள் மனித சமூகத்தை விட்டுத் தொலைய வேண்டுமானல் மனிதனுக்கு விஞ்ஞான அறிவும், நாட்டில் விஞ்ஞான வளர்ச்சியும் தேவை.

சாதிக்குச் சாதி குலத்துக்குக் குலம் ஒன்றுக்கொன்று சச்சரவுஎன்ற பேதத்தின் பெருங் கூத்தைப் பார்க்கிறீர்கள். பேச வாயில்லையா? கேட்கத் துணிவில்லையா? எதிர்க்கத் தைரியமில்லையா? இது உமது கடமையல்லவா?

காலம் எனும் வீரன் அறிவெனும் சம்மட்டி கொண்டு அடித்து நொறுக்குகிருன் - சாதி ஆச்சாரத்தை! இனி சாதீயம் பிழைத்துக் கொள்ள முடியாது காலம் தரும் தாக்குதலைச் தாங்கிக் கொள்ளும் சக்தி அதற்குக் கிடையாது.

சாதியினுல் விளையும் கேடுகளை அறியாத பாமரர்களை விட அதனை அறிந்திருந்தும் தமக்குச் சுக வாழ்வு கிடைக்கிறது சாதி இருப்பதினுல், என்ற காரணத்துக்காக சாதி முறைறைத் தங்கள் செல்லப் பிள்ளையாகக் கொள்ளும் படித்தவர்கள் தான் மிகப் பொல்லாதவர்.

✵

சாதிகள் இருந்தாக வேண்டும் என்று எண்ணுபவர்கள் எவ்வழி உலகம் செல்கிறது என்பதை அறியாத ஏமாளிகள். காலத்தின் தாக்குதலைக் கயவரின் தாக்குதல் என்றும், பகுத்தறிவின் வேகத்தைப் பாவ காரியம் என்றும் தவருகக் கருதிடும் பக்குவ மற்றவர்கள்.

✵

ஒருவனுடைய நாட்டில் வேறு ஒருவன் வந்து ஆதிக்கம் செய்யும்படியாகவும், நாட்டுக்குடையவன் கீழ் சாதியாகச் செய்திருக்கும், செய்து வரும் ஆட்சி எப்படிப் பட்டதானுலும் அது கொடுங் கோன்மை ஆட்சியே யாகும்.

✵

பாடுபடும் குலத்தைப் பழிப்பவர்களைவிட உழைக்கும் இனமே மேலானது.

✵

ஏழைகளை வஞ்சிக்க ஓர் ஏற்பாடு. அதற்குப் பெயர் – மதம். உழைக்கிறவனை ஒடுக்குவதற்கு ஒரு இயந்திரம் - அதற்கு பெயர் சாதி! பகற்கொள்ளை அடிப்பதற்கு ஒரு திட்டம் அதற்குப் பெயர் பூசை, சடங்கு, தட்சணை!

✵

ஒரு மரத்தின் பலன் எப்படி அதன் கனியைப் பொறுத்திருக்கிறதோ அப்படித்தான் ஒரு மதத்தின் பலன் அதைப் பின் பற்றும் மக்களின் நடவடிக்கைகளைப் பொறுத்திருக்கிறது.

*

மனிதருக்குள் பேதத்தையும், அச்சத்தையும் மூட்டக் கூடிய வளர்க்கக் கூடிய எந்த ஏற்பாடும் சுதந்திரத்தின் பரம விரோதிகளே !

# அழகு

அழகு களிப்பதற்கு எங்ஙனம் உதவுகிறதோ அது போலவே பிறரை அழிக்கவும் செய்கிறது.

*

அழகு என்பதற்கு ஒவ்வோர் ஆடவனும் ஒவ்வொரு விதமான பொருள் கொள்கிறான். அதுமட்டுமல்ல ஒரே ஆடவனுக்கு ஒரு சமயம் ஒன்று அழகாத் தோன்றும். மறு சமயம் மற்றொன்று தோன்றும்.

*

மாதர்கள் கூட்டத்தை ஆண் வண்டுகள் மலர்ச் சோலையாகவே மதிக்கின்றனர். சோலையிலே காவலாளி இருப்பது போல் பெண்கள் கூட்டத்திலே ஒரு பகுதிக்குக் கட்டும், காவலும் இருக்கிறது. மற்ற பகுதி வேலியற்ற தோட்டம்.

*

அழகு ஒரு ஆபத்தான ஆயுதம்.

# காதல்

உண்மையான அன்பு கனிந்திருந்தால் காரிகை தன்னைக் காதலன் நோக்கும் போது தலை குனிந்து நிற்பாள்.

அவள் கண்களால் என் இதயமெனும் கதவைத் தட்டினாள். நான் புன் சிரிப்பு என்னும் சாளரத்தை மட்டும் திறந்தேன்.

காதல் என்பது இருவர் மனது லயிப்பது. சுருதியில் சேர்ந்த சங்கீதம் போன்றது. மலரில் மணம் இருப்பது போன்றது. மதியில் குளிர்ச்சி இருப்பது போன்றது.

பகலோனைக் கண்டதும் மலர்ந்திடும் பங்கஜத்தைப் பட்டத்தரசனும் கூட சட்டமிட்டுத் தடுத்துவிட முடியாது. இது போலத்தான் உண்மைக் காதல் என்னும் உத்தம உணர்ச்சியை ஓராயிரம் பேர் முயன்றாலும் ஒரு நாளும் அழித்து விட முடியாது.

வாழ்க்கைத் துறையிலே மிக முக்கியமான - ரசமான கட்டம் காதல்.

உயிரும், உடலும், மலரும், மணமும், நரம்பும் நாதமும் மணியும், ஒளியும், கனியும், ருசியும் பிரியுமோ? பிரியின் பயனுமுள்ள தாமோ? அது போன்றதே காதல்.

வீணையிலிருந்து நாதம் பிறக்கும். மலரிலிருந்து மணம் தோன்றும். காதலிலிருந்தோ கவி, சித்திரம், ஓவியம் எல்லாம்-தோன்றும்.

❋

காதல் வஞ்சமற்றது. எவ்விடத்தும் சமத்துவம் பாராட்டக் கூடியது. வாலிபர் வாழ்க்கைக்கு உயர்வும் ஊக்கமும் அளிப்பது காதல் தான்.

❋

ஆணையும், பெண்ணையும், சேர்த்து வைக்கும் ஓர் வானவில் போன்றது காதல்.

❋

காதலின் விஷயம் தீயது மன்று அபாயமானதுமன்று. கெட்ட மனமுடையவர்களுக்குத்தான் காதல் விஷயத்தில் பயமும், அபாயமும் தோன்றும்.

# திருமணம்

சாதாரணமாக இருக்கும் கயிற்றில் மஞ்சள் தடவி அதற்கு ஒரு பெருமையை உண்டாக்கி அதற்குத் தாலி என்று பெயர் வைத்து மணமகனிடம் கொடுத்து மணமகள் கழுத்தில் முறைப்படி கட்டும்படி செய்வதால் அந்தக் கயிற்றுக்குப் பெருமை கிடைத்து விடுகிறது. கடையிலே, தறியிலே உள்ள கயிருக இருக்கும் போது அதை மதிப்பதில்லை.

❋

மேள தாளத்தோடு, சடங்கு சம்பிரதாயத்தோடு மாலை மாற்றிக் கொள்வது மட்டும் மணமாகிவிடாது. இரண்டு

உள்ளங்கள் ஒன்று கலக்க வேண்டும். அப்படி ஒன்றுகும் காட்சிதான் உண்மைத் திருமணம்.

✱

திருமணம் என்பது 'புத்' என்ற நரகத்தில் விழாதிருக்க வேண்டி ஒரு பிள்ளைப் பெறும் கருவிக்கு மாலையிடும் சடங்கல்ல. அது வாழ்க்கைக்கு ஓர் துணையைத்தேடிக் கொள்ளும் உத்தமமான நிகழ்ச்சி!

✱

ஒரு இளமங்கையைக் கிழவனுக்குத் திருமணம் செய்வதென்பது அவள் வாழ்க்கையைச் சித்திரவதை செய்வதாகும்.

✱

எக்காரணங்களைக் கொண்டு பார்த்தாலும் நாம் சீர்திருத்தத் திருமணம் நடத்தும் முறை தவறு என்று எடுத்துக் காட்டவோ அல்லது பழைய முறைதான் சரி என்று வாதிடவோ ஒருவராலும் முடியாது.

✱

காமக் குரோதம் மிருந்த அக்கினி பகவானை அழைத்து அவனைச் சாட்சியாக வைத்துத் திருமணம் நடத்துவது அறிவுக்குப் பொருத்தமானது தானு? அதைப்போலவே கண் மூடித்தனமாக நடந்து காமக் களியாட்டங்களில் ஈடுபட்ட மற்ற கடவுளையும் திருமணக் காலங்களில் எண்ணுவதும் கூடாதே!

✱

சுய மரியாதைத் திருமணங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கத் தொடங்கிவிட்டால் நாட்டிலே பரவிக் கிடக்கும் மூடக் கொள்கைகள் தாமாகவே சீந்துவாரற்றுப் போய்விடும்.

✱

தாலி கட்டினல் என்ன ? அது என்ன மாட்டுக்கு மூக்குக் கயிறு போடுவது போலவா ? தாலி கட்டினேன் என்ருல் ஒரு வீட்டுப் பெண்ணை சுகமாக கௌரவமாகக் காத்து ரட்சித்து வருகிறேன் என்று சத்தியம் செய்து கொடுத்தது என்றுதானே அர்த்தம் ?

திருமணம் - நாடு, மொழி, இனம், நிறம், ஏழை' செல்வந்தன், அறிவாளி மூடன் என்ற பேதமின்றி அனைவருடைய வாழ்க்கையிலும் சமமாக வந்து போகிற வாழ்வின் ஒப்பற்ற விழா !

திருமணம் என்ற மா நாட்டின் தலைவன் - மணமகன். திறப்பாளர் மணகள்,

# தாய்க்குலம்

பிள்ளைக்கனியமுதினை எடுத்துக் கொஞ்சு மொழி பேசுவோர் அவ்வமுதினைப் பெற்றிட தாய்க்குலம் எத்தனைபாடு பட்டது என உணர்ந்து பார்ப்பதில்லை - பொருள்களை ஆக்கித் தந்த பாட்டாளியை இவ்வுலகம் உணராதது போல.

# வாழ்க்கை

இன்பம் இல்லாத இல்லம் ஒரு இருண்ட வீடு.

செல்வர் இல்லங்களில் காணப்படும் சீரும், சிறப்பும் கூடக் காகிதப் பூதான். காண்பதற்கு மட்டுமே காட்சி ! மணம் இல்லை அங்கும்.

யாராருக்கு எது வாழ்க்கை என்று தோன்றுகிறதோ அதிலே தான் 'மேன்மை' அடைய வேண்டுமென்று தோன்றும்.

கடமை, தவம், தொழில், வாழ்க்கைச் சிக்கல் முதலிய பல கொள்ள வேண்டிய போது இரக்கம் காட்ட முடிவதில்லை. முடியாது - கூடாது.

பாழ்பட்ட மனம் ஒரு மியூசியம் போல இருக்கிறது. எது கொள்ளத்தக்கதோ அதை ஏற்றுக் கொள்ளுங்கள். எது தள்ளத் தக்கதோ அதைத்தள்ளி விடுங்கள்.

ஒழுக்கம் ஒரு பொது நீதி. ஆனால் அது இடத்துக்கு இடம் ஆளுக்கு ஆள் மாறுபடுகின்றது. எல்லா மக்களுக்கும் ஒழுக்கம் ஒரே படித்தாயில்லை. பெண்ணுக்கு ஓர் ஒழுக்கம் சொல்கிறோம். ஆண் அதைக் கடைப்பிடிப்பதில்லை. ஏழைக்கு ஓர் ஒழுக்கம் சொல்கிறோம். பணக்காரன் அதைக் கடைப் பிடிப்பதில்லை.

வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும், அனைவராலும் பூர்த்தி செய்து கொள்ள முடிவதில்லை இல்லாமை அல்ல இதற்குக் காரணம் செல்வத்தைப் பெருக்கும் சாதனம் சிலரிடமே சிக்கி விட்டதால் ஏற்பட்டுள்ள சீரழிவுதான் காரணம்.

எந்த மனிதனும் மற்றொரு மனிதனுக்கு உபகாரியாகவும் கடைசி பட்சம் தன்னால் மற்றவர்களுக்குத் துன்பம் தராதவனாகவும் இருப்பதே பெரிய ஒழுக்கம்.

வாழ்க்கை முள்ளுள்ள ரோஜா - முள் தோலால் மூடப்பட்ட பலா. தோலைக் களைந்தெறிந்து, பலாவுடன் பிணைந்துள்ள பசையையும் நீக்கி சுற்றுத் தோலை அகற்றினால் மட்டுமே சுளை கிடைக்கும்-சுவை உண்டு! பெரும்பாலானவர்களை முள் தைத்து விடுகிறது. அதனைக் களைய நேரம், நினைப்பு, சத்தியற்றவர்கள் உள்ளே சுளை இருக்கிறது என்ற உண்மையையும் மறந்து, வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம் என்ற வேதாந்தம் பேசவும், நம்மால் என்ன ஆகும் என நரம்பொடிந்த தத்துவமாகி காலங் கடத்தி வருகின்றனர்.

பயனில்லாத வாழ்க்கை பரிமளமில்லாத புஷ்பத்தைப் போலிருக்கும்.

கனி கிடைப்பது ரசம்பருக, மலரிருப்பது மணம் நுகர வாழ்க்கை இருப்பது இன்பக் கேணியில் குளிக்க.

# அச்சம்

அச்சம் மனிதனுக்கு அவசியமாக ஒருசில நேரங்களிலே தேவைப்படுகின்ற பொருள்தான். அது தேவைப் படாத பொருளுங் கூடத்தான்.

அச்சம் மக்களின் நினைவை விட்டு நீங்குமா என்றால் அது யாரையும் விட்டு நீங்காது

அச்சம் சில சமயங்களில் தேவைப்படுகிறது. பெருவாரியான நேரங்களில் தேவைப்படாதது. அதற்காக அதை அடியோடு வெறுப்பதற்குமில்லை.

ஆண்டவன் என்ற ஆதி காரணத்திற்கு மூலப்பொருளே அச்சம்தான்.

✵

மேல் நாட்டார் அச்சத்தை ஒரு புறம் ஒதுக்கினார்கள் ஆராய்ச்சியோடு - தெளிவோடு-அறிவோடு ஆராய்ந்தார்கள் பெற்றார்கள்.

✵

இயற்கைகளையும், மற்ற பொருள்களையும் அச்சமின்றி ஆராயத் தலைப்பட்டதினால்தான் நாம் நல்ல சாதனங்களைப் பெற முடிகிறது.

✵

அச்சம் என்ற அரவம் சீறிவரின் அதை அடித்துக்கொன்று முன்னேற்றம் காண உழைக்க வேண்டும். அச்சம் நமக்குச் சர்வ சாதாரண ஒரு பொருள் என்று கருதி அயரா துழைத்தால் தான் நமது இலட்சியப் பாதையில் நாம் நன்கு முன்னேற முடியும்.

✵

ஓராயிரம் ஆபத்துகள் ஓயாமல் நம்மை நோக்கி வருவ தாயினும் சரியே, நம் உள்ளம் உண்மையென்று உணர்ந்ததை உரைக்க அஞ்சுபவன் கோழை மட்டுமல்ல நாட்டுத் துரோகி!

✵

அஞ்சி, அஞ்சி அடிமைப்பட்டுப் பல நாள் சாவதைவிட அஞ்சாமல் - அடிமைப்படாமல் ஒரே நாளில் சாவது மேலல்லவா?

# கோபம்

ஆடுதாண்டும் அளவுள்ள காவேரி பிறகு அகண்ட காவேரியாகிறதே வேறு ஜில்லாவில், அதுபோல இடபேதம் இயல்பு பேதத்துக்குள்ள பல காரணங்களிலே ஒன்று ஒரு இடத்தில் கோபத்தைக் காட்ட முடிவதில்லை. ஆனால், கோபமே ஏற்படவில்லை என்று பொருள் அது கொதித்துக் கிளம்புகிறது வேறோர் இடத்தில் !

❋

ஒரு சமயத்தில் எக்காரணம் கொண்டோ, ஏதோ ஓரிடத்தில் மூண்டு இடபேதம் காரணமாக அடக்கப்பட்ட உணர்ச்சி (கோபம் மட்டுமல்ல எந்த உணர்ச்சியுமே) வேறோர் சமயம், வேறோர் இடத்தில் பல மடங்கு வேகத்துடனும், அளவிலும் வெளிப்படும்.

❋

அளவுக்கு மீறித் தண்ணீர் வந்தால் ஆற்றிலிருந்து வாய்க்காலில் திருப்பிவிட்டு வெள்ளத்தின் வேகத்தைக் குறைக்கிறோமல்லா ? உள்ள உணர்ச்சியும் அப்படித்தான். அடக்கியே வைத்திருக்க, வைத்திருக்க எங்கெங்கோ பாயும் - மேயும் கட்டுக்குக் கொண்டு வந்து பக்கம் பார்த்துத் திருப்பிக் கொதிப்பேறுதபடி குறைத்து முறைப்படுத்தினால் மோதுதலும் குறையும்.

❋

உள்ளத்தில் கொதிப்பு ஏற்பட்டால் பேசாமலிருந்துவிடக் கூடாது. பேசிப் பேசி ஆத்திரம் வெளியேற வார்த்தைகளைக் கொட்டிவிட்டால் தான் கொதிப்பு அடங்கும். பேசாமலிருந்தால் அந்தக் கொதிப்பு வளரும். ஆசாமி கருகிவிடக் கூடும்.

விளைவு என்ன என்பதுபற்றி கவலையின்றி விபரீதமான காரியங்கள் செய்யக்கூடும்.

அடக்கி வைத்திருந்த கோபம் கரையைப் பிளந்து கொண்டுவரும் வெள்ளம் போலாகும்.

# கலை

இனத்துக் கோர் கலையும், இடத்தின் இயல்பு, தட்ப வெட்பம் ஆகியவற்றுக்கு ஏற்றமுறையிலும் கலை உண்டாகும். வளரும் – மாறும்.

கலை இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும், விரிந்தும் வரும்.

கலைஞர் இன மக்களின் மனப்பண்பு. இவ்வின மக்களிடையே தோன்றும் தெளிவு, வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு!

இலக்கியம், கலைமணம் எங்கிருந்து கமழும்? ஓவியக்கலை எவ்வண்ணம் ஓங்க முடியும்? நல்லிசை எங்கிருந்து பிறக்கும்? மனத்திற்கு இயற்கை ஊட்டும் களிப்பு கிடைக்கவில்லையே பெரும்பான்மையோருக்கு!

மேனாட்டவரின் வாழ்வு கலை ஒலியுடன் திகழ்கிறது, இங்கோ? கவலை ஒலியே கேட்கப்படுகிறது.

கலை மக்கள் நிலையை மாசுபடுத்தும் போது அந்தக் கலையைத் தொலைக்காமல் வேறென்ன செய்வது ?

நாடகம் இன்று நள்ளிரவுச் சத்தமல்ல. அரைத்தூக்கத்தில் இருப்பவர்களுக்கு ஆனந்தம் தர முயற்சிக்கும் வெறும் ஆடல் பாடல் அல்ல. நாட்டிற்குக் கிடைத்துள்ள நல்லதோர் ஆசானாக மாறியிருக்கிறது - நாடகம் இன்றைய தினம்.

நடிகன் எந்த இடம் பெறத் தக்கவன் என்பது ரசிகர்களின் கையொலியில் இருக்கிறது.

இயல், இசை, நாடகம் மக்கட்கு அறிவு வளர ஆர்வமூட்ட அக மகிழ்ச்சி பிறக்க, நன்னெறியைக் காட்ட பயன் பட வேண்டும்.

நாடகத்தில் மறு மலர்ச்சி மிகமிக முக்கியமானது. நாட்டின் விழிப்புக்கு அது நல்லதோர் அளவு கோல். நாளை நாம் எப்படி இருப்போம் என்பதற்கு அதுவே அறிகுறியாகும்.

# அறிவும், ஆற்றலும்

மனிதனுக்கு முதலில் ஏற்படுகிறது குழந்தைப் பருவம். பிறகு சிந்தனைப் பருவம் வீட்டிலே !

அறிவாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை ! அறிவும், ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.

எத்தகைய கருத்துக்கும் மனதில் இடம் தருவதோடு மட்டும் நின்றுவிடக் கூடாது. ஆராயும் அறிவு வேண்டும். தீரமும், திறமும் இருந்தால் மட்டும் போதாது. இத்துடன் அறிவும் ஆராய்ச்சிகளும் தேவை.

அறிவு நாள் இது! கொடுமை அழிந்தே தீரும்.

திறமை வேறு. தன்மை வேறு.

அறிவு என்பது 'ஷெப்பீல்ட்' கத்தி. அதைக் கொண்டு ஆளையும் வெட்டலாம். பழத்தை அழகான துண்டுகளாக்கியும் உண்ணலாம்.

ஜனநாயக உணர்ச்சி ஏற்பட வேண்டுமானால் - பலப்பட வேண்டுமானால், நெஞ்சில் வீரமும், நேர்மைத் திறமும் வேண்டும். பழமையின் பிடிப்பிலிருந்து விலகும் நோக்கம் இருக்க வேண்டும் இதற்கு அறிவுத்துறையிலே புரட்சி ஏற்பட வேண்டும்.

விடுதலை, பொருளாதாரத் துறையினது மட்டுமல்ல - அறிவுத் துறையிலேயும் விடுதலை வேண்டும்.

# நிலையும், நினைப்பும்

ஒரு நாட்டின் நிலை அதன் நினைப்பை உருவாக்குகிறது

உன்னத நிலையில் உள்ள நாட்டின் நினைப்பு உயர்ந்திருக்கும். தாழ்ந்த நிலையில் உள்ள நாட்டின் நினைப்பு தாழ்ந்திருக்கும்.

*

நிலை உயர்ந்திருந்தால் நினைப்பு உயர்ந்திருக்கும். நிலை தாழ்ந்திருந்தால் நினைப்பு தாழ்ந்திருக்கும். நிலைக்கேற்றபடி நினைப்பும் இருக்கும்.

# உண்மை

தங்கச் சுரங்கத்தில் தங்ரேகை நேராக இல்லாமல் வளைந்து வளைந்து செல்வதை போல் உண்மையும் வளைந்து வளைந்து செல்கிறது.

*

உண்மைக்குச் சாட்சி தேவையில்லை.

# அன்பே கடவுள், தூய உள்ளமே கோவில் !

ஆயாசமடைந்தால் ஆகாயத்தைப் பார்ப்பதும் பசித்தால் பரந்தாமனை வேண்டுவதும், கஷ்டம் வந்தால் காளியம்மனைக் கும்பிடுவதுமாக நாம் இருக்கும் வரையில் நம்மை வதைக்கும் வறுமை தொலையாது.

*

உலகம் மாயம் இல்லை. உழைப்பவன் வாழ்வும் மாயமன்று. ஆனால் உழையாதவன் உல்லாசத்தில்தான் மாயம் இருக்கிறது. உழைப்பின் பெருமையை உணரவேண்டும். உல்லாசத்தின்

ஊற்று செல்வத்தின் பிறப்பிடம் எங்கே இருக்கிறது என்பதை அறிய வேண்டும்.

இந்த உலகத்தில் தானே முயன்று இன்ப நல்வாழ்வு தேடிக் கொள்வதுதான் லோகாயுதம். இறைவனை நோக்கித் தவம் செய்து மறு உலகத்திலே நன்மைகளைத் தேடுவதுதான் ஆத்மார்த்தம். உலக நல்வாழ்வை விரும்பாதவர்கள் எவரேனு முண்டோ ?

ஞானம் இருப்பதை இல்லை என்று கூறுவதே வேதாந்தம். இல்லாததை உண்டு என்று நம்பச் செய்வதே மார்க்கம். பொய்யும், புரட்டுமே சாஸ்த்திரம்.

கடவுளே இல்லை என்றோ, கடவுள் இருக்கிறார் என்றோ நான் கூறவில்லை. அறிவோடு, ஆற்றலோடு, ஆபாசமற்ற கடவுள் இல்லை நமக்கு. மாசு, மருவற்ற மதமில்லை நமக்கு. இனப்பற்று மிகுந்த இலக்கியம் இல்லை நமக்கு! அன்பு தரும் அறிவூட்டும் சமுதாயம் இல்லை நமக்கு. மனிதன் மனிதத் தன்மையோடு வாழ சுயேச்சைச் சுதந்திரம் இல்லை நமக்கு!

இனி ஒரு விதி செய்வோம். அதை எந்த நாளும் காப்போம் அன்பே கடவுள். அறநெறியே அபிஷேகம். தூய உள்ளமே கோயில்! மக்கள் பணியே பூஜை. அதற்காக வாழ்வோம்.

விதி - நமது பரம்பரை நோய்; பூர்வீகச் சொத்து.



# பொது இயல்

# வர்ணனைகள்

**கிராம விவசாயிக்கு :**

**வ**ரப்பு ஓரம்தான் அவனுக்கு "டின்னர் டேபிள்". நண்டு வளை வயல்கள் தான் அவன் குழந்தைகள் விளையாடும் விளையாட்டு மைதானம்; எருமைகள்தான் அவனுக்கு ஓடும் குதிரைகள் இருசு ஒடிந்த இரட்டை மாட்டு வண்டிதான் அவனுக்கு "ரோல்ஸ் ராய்ஸ்" கார். காளிகோவில் விளக்கு தான். அவனுக்கு இரவிலே வெளிச்சம், நல்லதங்காள் கதைதான் அவனுக்கு சிறந்த இலக்கியம்.

❋

ஆஜாநுபாகுவான அவனது தோள்வலிமைபற்றி தோழியர் உரைக்கக் கேட்டுத் தூக்கத்தை மறந்து தோகையர் பலர், சுருண்டு வளைந்த கேசம், பரந்து விளங்கி, மேயும் குணம் படைத்த கண்கள் அவைகளிலே விண்மீன்களுக்குள்ள ஜொலிப்பு இவற்றுடன் உள்ளப் பண்பு கொண்டவன்.

❋

முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பிய முழு மதிபோல் துன்பத்தைத் துளைத்துக் கொண்டு வெளிவந்து இன்ப உலகில் இடம் பெற்றவள் அழகு, அறிவு, அந்தஸ்த்து, அலங்காரம், அபிநயம் அடங்காத ஆசை இவைகளின் கூட்டுச்சரக்கு அவள்.

❋

அழகில்லா அணங்கு புகழில்லா ஆடவன் கற்பனைத் திறமில்லாத கவி, பாதகத்துக்கு அஞ்சும் இராஜதந்திரி போகத்தில் புரளாத பிரதானியர், பொய்யுரைக்கத் தெரியாத சேடியர் ஆகியோருக்கு ரோம் சாம்ராஜ்ய சபா மண்டபங்களில் இடம் கிடையாது.

ஜூலியா பெரிய ஜாலக்காரி! சிங்காரி! சிரித்து சித்திரவதை செய்யும் சொகுசுக்காரி! வெறும் அலங்காரி மட்டுமல்ல, பலே கைகாரி சதுர்யமான பேச்சுக்காரி சரசத்திற்கு அதிகாரி! ஆடவர் கூட்டத்திற்கே அவளோர் சிங்காரி!

நீரின்றி வாழ முடியாது. நீரிலேயே வாழவும் முடியாது நெருப்பின்றி வாழமுடியாது. நெருப்பிலேயே வாழவும் முடியாது. காற்றின்றி உயிர் இல்லை காற்றிலேயே இருந்துகொண்டிருக்க முடியாது. இயற்கையின் சக்திகளின்றி வாழமுடியாது ஆனால் இயற்கையுடன் மட்டுமே வாழவும்முடியாது

இயற்கை ஓர் இன்பவல்லி—ஆனால் ஓர் ஜாலக்காரி! அவள் மிரட்டுவது கண்டு. அவளை அடியோடு வெறுத்து ஒதுக்கிவிட முடியாது, ஒதுக்கிடின் மக்களுக்கு வாழ்வில்லை. அவள் புன்னகை கண்டு பூரித்து செயலற்று இருந்துவிட முடியாது வாழ்க்கை செம்மைப்படாது.

முதலில் லஜ்ஜை! பிறகு ஒருவிதமான சந்தேகம்! அதற்கடுத்தபடி ஒருவகையான சந்தோஷம்! பிறகு கண்டதும் முகமலர்ச்சி! காணவிட்டால் கவலை! பிறகு கண் கடிதம்!

# உவமைகள்

கூண்டிலிருந்த கிளி பறந்துபோய்விட்டால் கூண்டினைக் காலியாகவேனும் வைத்திருக்கலாமே தவிர ஏதாவது இருக்கட்டும் என்று ஒரு கோட்டானைப் பிடித்தா அந்தக் கூண்டுக்குள்ளே அடைத்துவைப்பார்கள் ?

✱

எல்லாப் பாம்புகளும் ஒரே மாதிரியாக இருக்கிறதில்லையே! அதுபோல சில தீண்டினாலும் தீர்ந்தது. சில தீண்டினால் உடல் முழுதும் வீக்கம், ஆனாலும் எந்தப் பாம்பு நல்லது ? எது விஷமில்லாத ஜந்து ?

✱

சிறுத்தை - மானின் கண்கள் எவ்வளவு மனோகரமாக இருக்கின்றன என்று எண்ணி, விட்டு விடுகிறதா? பஞ்ச வர்ணக் கிளியுடன் பூனை கொஞ்சுகிறதா ?

✱

உயிர் வாழ உபயோகமாகும் தண்ணீர் உயிரையே குடித்து விடுகிறது - குளத்தில் விழுந்து இறக்கையில் ! வாழ அவசியமாக இருக்கிற நெருப்பே நமது உடலை சாம்பலாக்கு கிறது.

✱

மத்தாப்பூ கொளுத்தும்போது எவ்வளவு வண்ணம் எத்தனை ஒளி, ஆனால் எவ்வளவு சீக்கிரத்தில் தீர்ந்துபோய் விடுகிறது. அதுபோலத்தான் ராஜதந்திர முறை காரணமாக உபசாரம் தரும் ஒளி ! சிறு அகல் விளக்கானாலும் பரவாயில்லை –

மத்தாப்பூப் போல அல்ல, நின்று நிதானமாக ஒளிவிட்டு இருளை அகற்றும்.

ஆளும் கட்சி பானையானால் - எதிர்கட்சி அகப்பை ஆளும் கட்சிப் பானையில் சாதம் வெந்திருக்கிறதா என்று எதிர்கட்சி பார்க்கவேண்டும்.

மல்லிகைத் தோட்டத்திலே மணம் வீசினாலும் புதரில் நந்திருக்கும் பாம்பின் குணம் மாறாதே!

மான் மந்தையைச் சிறு ஒநாய்க் கூட்டம் விரட்டியடிக்க முடியும்.

புலியை அழைத்துப் பூமாலை தொடுக்கச் சொல்ல முடியாது.

உத்திராட்சம் அணிந்ததாலேயே பூனை போதகாசிரியனாகி விடாது.

கடிவாளம் அறுபடும் சத்தம் கேட்ட பிறகும் கவலையற்று வண்டிக்குள் அமர்ந்து கொண்டு கிளிக்கண்ணி பாடுவதா?

தேளைத் தேவனென்றும் பாம்பைப் பரமனென்றும், நரியை நாதனே என்றும், புலியைப் புண்ணியாவென்றும் பித்தருங் கூறுரே.

பணக்காரன் குளம் குட்டைகளுக்குச் சமமானவன் முதலாளி ஊற்றுக்குச் சமமானவன், மழை பெய்தால்தான் குளம் குட்டைகளில் நீர் இருக்கும்; இன்றேல் வரண்டுவிடும். ஆனல் ஊற்றோ என்றும் நீர் சுரந்து கொண்டே இருக்கும். இத்தகைய பேதம் இருக்கிறது பணக்காரனுக்கும் முதலாளிக்கும்.

விஞ்ஞானம் குழைத்துக் கரைக்கப்பட்ட வண்ணச் சுண்ணம். அதனைக் கொண்டு அழகான பெண்ணின் உருவத்தையும் தீட்டலாம். கோரமான குரங்கின் உருவையும் எழுதலாம். குரங்கு எழுதப்பட்டால் குற்றம் கலர் கிண்ணத்தின் மீதா ? ஓவியன் மீதா ?

# தேர்தல் உவமைகள்

கர்ப்பவதி குழந்தை பெறுவாள். மருத்துவச்சி உதவிதான் புரிவாள். அவளைப்பிள்ளை பெறச்சொன்னல் முடியுமா? ஆளும் கட்சிதான் சாதனை புரிய முடியும். எதிர்க்கட்சி குறைகளை எடுத்துச்சொல்ல முடியும். சாதனை புரியமுடியுமா ?

காங்கிரஸ் கட்சி ஒரு முருங்கை மரம். அதில் தியாகிகள் எனும் முருங்கைக் கீரையையும், முருங்கைக் காயையும் பறித்து

குழம்பு வைத்து துவட்டியாகி விட்டது. இப்போது அங்கு கம்பளிப் பூச்சிகள் இருக்கின்றன. மரத்தில் இருக்கிறதே என்பதற்காக அதையுமா பிடித்துக் கறிசமைப்பார்கள்.

காலையில் பற்றவைத்த அடுப்பை மாலையிலே அணைத்து விடுவார்கள். விடியும் வரை இருந்தால் தீப்பற்றிக் கொள்ளும் காங்கிரஸ் அடுப்பிலே செய்ய வேண்டிய வேலையான சுதந்திரம் பெறுவது முடிந்துவிட்டது. அதை அணைத்துப் போட்டிருக்க வேண்டும் அணைத்துப் போடாததால்தான் இன்று நாடே பற்றி எரிகிறது.

கிழவன் ஒருவனுக்கு 16 வயதுடைய அழகான பாவையைத் தருவார்கள் என்ற தைரியத்தில் இருக்கிருன். அவனுக்கு எப்படி அந்தத் தைரியம் வந்தது. அவன் பெட்டியிலிருக்கும் பணம் தான் அந்தத் தைரியத்தைத் தந்தது. அதுபோல பணத்தின் பலத்தை நம்பி காங்கிரஸ் எனும் கிழம் நாட்டின் எதிர் காலம் எனும் இளம் பெண்ணை அடைய விரும்புகிறது.

சுறு சுறுப்பான இன்ஸ்பெக்டர் வந்தால் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக்கு ஆபத்து. சட்டசபையில் சுறு சுறுப்பான பணியாற்றி அவர்கள் தவறுகளை எடுத்துச் சொல்வதால் நம்மைத் தோற்கடிக்க நினைக்கிருர்கள்.

நமது கழகம் அழகுள்ள பெண். அதற்குச் சீர் வரிசை தேவையில்லை. ஆனால் காங்கிரஸ் மூக்கும் முழியும், நோக்கும்.

போக்கும் கலந்திருக்கிறது. அதனுல்தான் அதற்கு அதிகப் பணம் கொடுத்து சீர்வரிசை செய்ய வேண்டியிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்ற அபாரத்திறமை பெற்ற பெரியார் புறப்பட்டிருக்கிருர். பெரிய டாக்டர் நோயாளி வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருக்கிருர் என்ருல் என்ன பொருள் ? நோய் அவ்வளவு கடுமை என்று அர்த்தம்.

நீதிக்கட்சிக்குத் தந்தையாக இருந்தவர்கள் சட்டசபை சென்று தூங்கிவிட்டார்கள் நாட்டில் கொள்ளையடிக்கவரும் காங்கிரஸ் கள்வரைப் பார்த்து அழும் ஒரே ஒரு ஜீவன் சிறு குழந்தைப் பருவமாயுள்ள தி. மு. கழகம். அக்குழந்தையையும் கொல்லத் துணிகிறது காங்கிரஸ்

பொதுவாழ்வுத் துறையில் புதியவர்கள் என்று அலட்சிய மாகப் பேசுவது மட்டுமல்ல, புகக் கூடாதவர்கள் என்று வெறுப்புடன் பேசுவோர் நிரம்பிய நிலையை நான் அறிவேன். அரசியல் கட்சிகள் தேர்தல்களில் ஈடுபடும்போது ஏற்படும் வெற்றி தோல்விகள் ஓட்டு எண்ணி அறிவிக்கப்படும் முடிவு கள் காட்டும் பாடத்துடன் நின்று விடுவதல்ல ! ஒரு கட்சியின் தாங்கும் சக்தியைக் கணக்கெடுப்பதே இதிலே முக்கியமான பாடமாகக் கொள்ள வேண்டும். வைரம் என்பது நெடுங் காலமாய் இறுக்கி வைத்த ஒரு துண்டு நிலக்கரியேயாகும்.

# முத்துக் குவியல்

அன்பு என்பது தர்க்கத்திற்குக் கட்டுப்படாதது. அதனை அளக்கும் கோல் கிடையாது. நிறுத்திடும் துலாக் கோலும் இல்லை.

ஒருவரை ஒருவர் கண்டதும் முகமலர்ச்சி சிரமமின்றி ஏற்பட வேண்டும். பயன் கருதி அல்ல - பாசாங்குக்கு அல்ல. அர்த்த மற்றது அல்ல-கண்டதும் களிப்பு நன்மைப் போல் ஒருவன் என்ற நினைப்பிலிருந்து களிப்பு மலர வேண்டும். அந்த அக மலர்ச்சிக்குப் பெயர்தான் தோழமை.

ஒருவன் சிரிக்கிறான். அவனோடு ஆயிரம் பேர் சிரிக்கிறார்கள். இது இருக்கவேண்டிய சிரிப்பு. ஒருவன் சிரிக்கிறான். அதனால் ஆயிரம் பேர் அழுகிறார்கள். இது அழிய வேண்டிய சிரிப்பு.

திருக்குறள் தமிழகத்திற்குச் சிறப்பொளி தந்துவந்த நந்தா விளக்கு. அதனை இன்று தமிழர் கண்டெடுத்துத் தம் உள்ளத்துக்கு ஒளி தேடிக் கொள்கின்றனர்.

குறள் தந்த ஒளி தமிழகத்துக்கு இருந்தும் பிறகு ஏன் ஓர் இருட்படலம் மக்கள் மனதைப் பிடித்துக் கொண்டது.

விழிப்போரே நிலை காண்பார்! விதைப் போரே அறுத்திடுவார்.

மறை அறியார் எனினும் அவர் மறையவராம்.

பித்தேறி மேல் கீழ் என்று பேசுவோர் உறவு வேண்டாம்.

பணத்துக்கு இருக்கும் காந்தசக்தி விசித்திரமானது.

கல்யாணம் செய்து வைக்கப்பட்டது என்பதற்கும் செய்து கொண்டான் என்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம்.

உண்மைக்குச் சாட்சி தேவையில்லை.

கருத்திழந்தவனுக்கு நல்லுரையும், கண்ணிழந்தவனுக்குக் காட்சியும், செவி மந்த மடைந்தவனுக்குக் கீதமும் பயனில்லை.

தாளமில்லாத பாட்டு; தடாகமில்லாத ஊர்; தயவில்லாத தையல் யாருக்குப் பிடிக்கும்.

மணமுள்ள மலர்; சுவையுள்ள கனி; சுந்தரமான மாது இவைகளிடம் அனுபவிக்கத் தெரிந்தவர்கள் அடிமையாகிறார்கள்.

சந்தனக் காட்டைக் கடந்து மணமும் குளிர்ச்சியும் மருவி மக்களை மகிழ்விக்க வருகிறதே தென்றல் அது போன்றது, வாலிபம்.

✱

வீரருக்கு அழகு எதிர்ப்படும் எத்தனை ஆபத்தையும் பொருட்படுத்தாது போரிடல்.

✱

காலம் என்னும் சிறையிலிருந்து தன்னை விடுதலை செய்து கொள்ளாதவன் சிறந்த கவியாக மாட்டான்.

✱

கண்ணீரில் பலவகை உண்டு. நிகழ்ச்சிகளின் தன்மைக்கு ஏற்ப கண்ணீரின் வகை அமைகிறது. வெற்றிக்களிப்பு, தியாக உணர்ச்சி, மகிழ்ச்சிப் பெருக்கு, வேதனை, கோபம் எனும் பல்வேறுணர்ச்சிகளின் போதும் கண்ணீர் வெளிப்படுகிறது. வகைபல – முறை கூடப் பலப்பல அதனால்தான் கசிந்தான், பொழிந்தான், கதறினன், வடித்தான் என்று பல விதமான பதங்களைக் கண்ணீருடன் இணைக்கின்றோம்.

✱

ஆர்ப்பரித்துக் கிடப்பவன் ஓர் நாள் அழுது தீர வேண்டும்.

✱

மக்களைக் கசக்கிப் பிழிபவன் ஓர் நாள் கண்கலங்கி நிற்க வேண்டும்.

✱

கனல் கக்கிக் கிடப்பவன் ஒருநாள் கண்ணீர் சிந்திட வேண்டிவரும்.

சன நாயக அமைப்பில் அடக்கி ஒடுக்கப்படுகிறவர்களுடைய அவதிப்படுகிறவர்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராட வேண்டியது எதிர்க்கட்சியின் கடமையாகும்.

மோட்டார் நன்ருக ஓட விசையிருந்தால் மட்டும் போதாது. தவருன வழியில் செல்லாமல் தடுக்கும் பிரேக்கும் இருக்க வேண்டும். அதுபோல சன நாயககாலத்தில் குடியாக வந்த பிறகு - நல்லாட்சி நடக்கவேண்டுமானுல் ஆளுங்கட்சி ஒன்று இருந்தால் மட்டும் போதாது. மாற்றுக் கட்சிகளும் இருக்க வேண்டும்.

உழைப்பே செல்வம். உழைப்பார்க்கே உரிமையெல்லாம். உழைப்பாளிகளுக்கே உலகம் உரியது.

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்; அவன் காணத் தகுந்ததும் வறுமையாம்; அவன் பூணத்தகுந்ததும் பொறுமையாம்.

அதிகாரமும் அதுதரும் ஆனந்த வாழ்வும் ஆபத்தான ஓர் வலை, அதிலே வீழ்ந்தோர் வேதனையே அடைவர். சறுக்கு நிலம், எரிமலை, படுகுழி இவைகளுக்குச் சமம். அதிகாரம் நண்பர்களையே விரோதிகளாக்கும். நாட்டிலும், வீட்டிலும் வாட்டத்தையே வளர்க்கும்.

சிங்காதன மென்பது ஒரு பாம்புப் புற்று! அதன் மீது அமர்வோரை ஏமாந்த நேரத்திலே புற்றிலிருந்து கிளம்பும் பாம்பு பொல்லாத பற்களால் கடித்துக் கொல்லும்.

ஒரு நாடு இன்னொரு நாட்டை அடக்கிவைக்க முடியாது, அடக்கினால் எரிமலை கக்கும். மக்கள் மனமெனும் கடல் பொங்கிவழியும். புரட்சிப்புயல் வீசும். அந்தப் புயலின் முன்பு எந்தக் கொடியவனாலும் நிற்க முடியாது.

உரத்த குரலோன் காட்டிய வழி நடந்தோம்-அரசியலில்! கபடன் காட்டிய வழிநடந்தோம் - சமூகத்துறையில்! பூசாரி காட்டிய வழிச் சென்றோம் - அருள் பெறும் நெறியில்! எத்தன் காட்டிய வழி நடந்தோம் - பொருளாதாரத் துறையில்! முடிவு? வாழவழியற்றதுதான்.

நேற்றுச் சட்டத்தை மீறியவர்கள் இன்று சட்டத்தை இயற்றுபவர்களாக இருக்கிறார்கள்.

சட்டத்தை அமுல் நடத்துகிறவர்கள் சட்டத்திலுள்ள குறைபாடுகளைக் கவனித்து உரிய திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

சட்டம் தனி நபரின் சுதந்திரத்தில் குறுக்கிடுவதாக இருந்தால் அதை மீறத்தான் தோன்றும்.

வண்ணக் கலயங்களில் உள்ள சிவப்பும் பச்சையும் நீலமும் மஞ்சளும் கருப்பும் பிறவுமான வண்ணங்கள் தூரிகை கொண்டு ஓவியம் வரைவோனின் திறமையினல் வானமாகி, வாவியாகி, மலராகி, மாதாகி, கனியாகி, கிள்ளையாகி, அருவியாகி, அல்லியாகி விடுகிறது. கலயத்தில் இருந்தபோது, வெறும் வண்ணக் குழம்பு! ஓவியமான பிறகோ புத்தம் புதிய வடிவங்கள். வண்ணக் குழம்பின்றி ஓவியம் இல்லை. உண்மை. எனினும் ஓவியமான பிறகு, வண்ணக் குழம்பு என்ருல்தான் இவையாவும் என்று உரிமை கொண்டாடவா முடியும். நம் உழைப்பு அந்த வண்ணக் குழம்புக்கு ஒப்பிடலாம். ஓவியன் நிலையில் உள்ளது காலச்சக்கரம்.

✷

மின்சார விளக்கானாலும், பழைய விளக்கானாலும் அதற்கு விசையிருப்பதை நீங்கள் அறிவீர்கள். விளக்கின் திரியைத் தூக்கவும், விளக்கின் ஒளியைக் கட்டுப்படுத்தவும் அதிகப் படுத்தவும் விசையிருப்பதைக் காணலாம்.

✷

வெளிச்சம் அதிகமாக வேண்டும் என்ருலும் குறைவாக வேண்டுமென்ருலும் இதைப் பயன்படுத்திக் கொள்ளுகிருேம். விசையில்லாமல், தூண்டுகோல் இல்லாமல் எந்த விளக்கும் இருக்காது. இருக்கவும் கூடாது.

✷

நம்மைத் தனிப்பட்ட முறையில் தாக்கியோ, தரக்குறைவாகப் பேசியோ, இழிவுபடுத்த ஒருவன் முனைந்தால், தாங்கிக் கொள்ளலாம்; கோபத்தை அடக்கிக் கொள்ளலாம். ஆனல், தமிழர் என்ற இனத்தை, தமிழ் மொழி என்ற நமது தாய் மொழியை, நமது மரபினை இழித்தும் பழித்தும் பேசினல்,

தாங்கிக் கொள்ளும் அளவும் கூட அறமாகாது. உணர்ச்சியே எழவில்லை என்றால், தமிழ் இனம் வாழாது.

❋

தனிப்பட்டவர்களுக்குத் தனிப்பட்ட காரணங்களுக்காக கோப உணர்ச்சி கொதித்தால், அவர்களுக்கு உள்ள பலமும் போய்விடும். மற்றவர்கள் கண்டு எள்ளி நகையாடவும் செய்வர். ஆனால், பொதுநல நோக்கத்துக்காக, இனத்துக் காக, மொழிக்காக உணர்ச்சிப் பிழம்பாக நாம் மாறும்போது, புதியதோர் வலிவு பெறுகிறோம். காண்போர் கனிவு காட்டு கின்றனர்; அவர்களேகூட எழுச்சி பெற்றவர்களாகி விடுகின் றனர்.

❋

ஜுரவேகத்தில் இருப்பவனை, நாலுபேர்சேர்ந்து அழுத்திப் பிடித்தாலும், நெம்பிக்கொண்டு எழுவான். அது வலுவின் அடையாளமல்ல; நோயின் தன்மை. கட்டான உடலை உடற் பயிற்சி முறைகளால் மேலும் வலுவுள்ளதாகவும் ஆக்கிக் கொண்டால், பத்துப் பேர் பிடித்திழுத்தாலும் நிலை குலையாத தன்மை கிடைக்கும். அது உண்மையான வலுவுக்கு அடையாளம்.

❋

வயல்களிலே கதிர் குலுங்கிடின், சர்க்கார் அலுவலகங் களில் மகிழ்ச்சி துள்ளும்; தொழிற்சாலைகளிலே தோழமை மலர்ந்து, நீதியும் நிம்மதியும் கிடைத்து உற்பத்தி பெருகிடின், நாட்டு நிலை உயர்ந்திடும். அங்காடியிலுள்ளோர், கொள்வன, கொடுப்பன என்பவை நேர்மையான அடிப்படையில் அமைந் திருத்தல் வேண்டும் என்று இருந்திடின், அக விலையும் பதுக்க லும் அழிந்துவிடும். பொதுமக்கள் வாழ்வு சீர்படும்.

மரம் இருக்கிறதே அதன் அடிப்பகுதிதான் மரத்தைத் தாங்கிப் பிடிக்கிறது. ஆனுல் அடி மரத்தில் பூ இருக்காது, பழம் இருக்காது. நுனி மரம் பூத்துக் குலுங்கும்! பழக்குலைகள் தொங்கும். நுனிமரம் பூத்துக் குலுங்குகிறதே என்று அடிமரம் வருத்தப்படுவதில்லை. அடி மரமாவது கண்ணுக்குத் தெரிகிறது; ஆனுல், அந்த அடி மரத்தையும் தாங்கிப் பிடிக்கும் வேர்கள், கண்ணுக்குத் தெரியாமல் மண்ணுக்குள் மறைந்து கிடக்கின்றன.

✱

செடியில் மலர் சிங்காரமாக இருக்கிறது. அதனைப் பறித்து கசக்கினுல் கெடும். வண்டு ஆனந்தமாக ரீங்காரம் செய்கிறது. அதனைப் பிடித்துப் பேழையிலிட்டால் கீதம் கிளம்பாது. கிளி கூண்டிலிருக்கும்போது கொஞ்சுவதாகக் கூறுதல் நமது மயக்கமே தவிர வேறில்லை. கிள்ளை கொஞ்ச வேண்டுமானுல் கோவைக் கனியுள்ள தோப்பிலே போய்க் காணவேண்டும். மழலைச் சொல் இன்பத்தை மற்றதில் காண முடியாது. அது போன்றே இயற்கையாக வாழும் காதல், தடைப்படுத்தப் படாமல், அதற்குச் சுவர் போடப்படாமல், அது தாண்டவமாடும்போது கண்டால் அதன் பெருமையைக் காணமுடியுமே தவிர வேறு விதத்தில் காணமுடியாது

✱

பசியினுல் களைத்துப் படுத்துத் துயிலும் புலியின் வாலை வேண்டுமானுலும் வளைத்து ஒடிக்கலாம். ஆனுல் காதல் நோயில் சிக்கிக் கொண்டவனைத் தொந்தரவு செய்தால் அவன் புலியினும் சீறுவான், எதுவுஞ் செய்வான் எதற்கும் அஞ்சான். எதையும் கருதான்.

✱

கோவில் மாடு இருக்கிறதே அது கண்ட இடத்திற்குப் போகும், கண்ட கண்ட பொருட்களைப் பாழ் படுத்தும். வீதியிலே ஏதாவது பண்டத்தை உலர்த்தியிருப்பார்கள். அதைக் கோவில் மாடு பாழ்படுத்தும். பக்கத்து அங்காடியில் உள்ள தானியத்தில் வாயை வைத்து அதில் ஒரு பிடி எடுத்துக் கொள்ளும். அடுத்துள்ள கழனியில் புகுந்து அது யாருக்குச் சொந்தமானது என்று அறியாமல் பாழ்படுத்தும் தன்மையுள்ளது. இதனைப் போன்றுதான் காங்கிரசுக் கட்சி.

☀

நான் சனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவன். அரசியலில் கண்ணியத்தை விரும்புபவன்-கட்டளையிடுபவனல்ல, சனநாயகம் வளர்ந்துள்ள இந்த நாளில் கட்டளையிடும் தலைவர்கள் தோன்ற முடியாது-தோன்றவும் கூடாது. சனநாயகமில்லாவிட்டால் அரசியலால் பயன் ஏதும் இல்லை. நான் நானாக ஏதும் செய்வதில்லை-செய்யவும் மாட்டேன். உங்களிலே பலரின் கருத்துரைகளைக் கேட்கின்றேன்-தொகுத்துப் பார்க்கின்றேன்-பிறகு அதன்படி முடிவுக்கு வருகிறேன்.

☀

சாதாரண மக்களின் துணைகொண்டே கட்சியை நன்றாக வளர்க்க முடியும் என்பதை வாலிபர்கள் உணரவேண்டும் அன்னக்காவடிகள்தரும் ஆதரவு பணக்காரர்கள்தரும் செக்கைவிட, ஜமீன்தார்கள் தரும் பணமுடிப்புகளை விட விலையுயர்ந்தவை, வலுவுடையவை என்பதை வாலிபர்கள் உணரவேண்டும்.

☀

கடும் விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டோர், காரிருள் சிறையில் ஆயுட்காலம் முழுதும் தள்ளப்பட்டோர், கல்லால்

அடித்துத் துரத்தப்பட்டோர், கழுத்து நெறிக்கப்பட்டோர், கனலில் தள்ளப்பட்டோர், நாதியற்றுப் போனோர், என்று இவ்விதமாகத்தான் இருக்கும். சமூகப் புரட்சி பணியிலே ஈடுபட்டவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள். நாம் அந்த இனம்.

அறநெறி என்று கூறப்படுவது மந்திர உச்சாடனச் சொல் அல்ல. ஓமகுண்டத்தருகே உலவுவதல்ல! கள்ளமில்லா உள்ளத்தில் பூத்துக் காய்த்துப் பழுத்திடும் பயனும் சுவையும் உள்ள கனி. அது, வெறும் பொருள் பகிர்ந்து கொள்ளும் முறைமட்டுமல்ல-தொழில் அமைப்புத் திட்டம் மட்டுமல்ல-இவைகளுடன் கூட, மக்கள், எவ்வகையிலே இழிவாலும் கொடுமையாலும், தாக்கப்பட்டாலும், அவர்களை மீட்டிடவும், அத்தகைய தாக்குதல் மக்களுக்கு நேரிடாதபடி முறை வகுத்தலும் ஆகிய எல்லாம் சேர்ந்த, பொதுவான, பொறுப்பான, வாழ்க்கை அமைப்புத்திட்டம் அறநெறி. எனவேதான், மனித குலம், குரங்கு நிலையிலிருந்து கோயில் கட்டிக் கும்பிடும் நிலை அளவுக்கு வளர்ந்தும், எந்த இன்பம் இன்னமும் கிடைக்கவில்லையோ, அந்த இன்பத்தைப் பெறுவதற்கு, வள்ளுவர் அறநெறியைக் காட்டியிருக்கிறார், அறுதியிட்டுக் கூறியிருக்கிறார்; அறத்தால் வருவதே இன்பம்.

# உணவில் தன்னிறைவு

தமிழகத்தைப் பொருத்தவரையில் தானம்வாங்குவதைப் பெருமை என்று கருதியதில்லை.

இந்தியத்துணைக்கண்டத்திலேயே தமிழ் நாட்டில் தான் நல்ல வளங்கள் நிரம்ப இருக்கின்றன. பன்னெடுங்காலமாக

உணவு உற்பத்தியில் தன்னிறைவுடன் விளங்கிய பகுதி தமிழகம் ஆகும்.

❋

புராணங்களில் மகாபாரதத்தில்கூட பாண்டவருக்கும் கௌரவருக்கும் போர்நடக்கையில் தமிழகத்து அரசுதான் சோறுபோட்டதாக கூறுகிறது. இதிகாசங்கள் சுட்டிக் காட்டும் இந்தப்பகுதி தமிழ் மக்கள் எவ்வளவு கடமை உணர்ச்சியோடு இருந்தார்கள் என்பதைக் சுட்டிக்காட்டுகிறது.

❋

தரிசாகக் கிடந்த இடத்தை விளைநிலமாக்கிடவியர்வை சிந்துவோர் மக்கள் வசதிக்காகப்பாடுபடுவோர் உற்பத்தி விநியோகம் இவற்றை நேர்மையாகச் செய்வோர் என் நண்பர்கள், வணக்கத்துக் குறியவர்கள்.

❋

உற்பத்தித்துறைக்கு முட்டுக்கட்டையிடுவோர் உற்பத்திக் காகப்பாடு படுவோரின் வயிற்றிலடிப்போர் இவர்கள் எனக்கு மட்டுமல்ல சமூகத்துக்கே பகைவர்கள். விளைந்ததைப்பதுக்குவோர் நாட்டை நாசமாக்கும் நடமாடும் நோய்கள்.

❋

ஊழல் ஊதாரித்தனம் இலஞ்ச இலாவனம் ஆகிய கேடுகளைச் செய்வோர் நாட்டின் அவமானச் சின்னங்கள்.

MADRAS-1
சென்னை-1